ஓம் சாயிராம்

# சாயி மார்க்கம்

## ஜனவரி - மே 2010

இலங்கை
ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின்
தமிழ் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாயி மார்க்கம்
# Sai Markam


| மலர் : 17<br>இதழ்: 44 | ஒரே ஒரு மதம் அது<br>அன்பு என்னும் மதம் | ஜனவரி - மே<br>2010 |
|---|---|---|



ஆசிரியர்:
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்
தொ.பே: 0212222832, 2225580

துணை ஆசிரியர்:
திரு.S.R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி, தாவடி
கொக்குவில்.
தொ.பே: 021-2225442



இலங்கை தனிப்பிரதி ரூபா 50.00
வருடச் சந்தா ரூபா 200.00
(4 பிரதிகள்)
வெளிநாடு
வருடச் சந்தா U.S டொலர் 15

சந்தா அனுப்பும் முகவரி:
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

காசோலை:
Sai Markam
Sathya Sai Seva Org (NZ)
A/C no: 0402301 - 1
Hatton National Bank
Jaffna, Sri Lanka.


## பொருளடக்கம்


1. மலரும் பொற்காலம் 2
2. மதங்கள் பற்றிய சுவாமியின் பார்வை 4
3. இது ஒரு பொற்காலம் 6
4. தன்னலமற்ற சேவையே இறைவனை அடையும் பாதை 7
5. உள்ளிருந்து வழிகாட்டும் பாபா 10
6. திருஓணம்- திருவோணம் 12
7. அடியேன் வாழ்வில் சாயிநாதன் 14
8. சத்திய சாயி குடிநீர்த் திட்டங்கள் 17
9. கருணைக்கடல் சாயியின் அற்புதங்கள் 21
10. ஸ்ரீமத் பாகவத வாஹினி - கிருஷ்ணன் பரம பதம் 23
11. எல்லாம் இன்ப மயம் 27
12. கடமை முதலில் தன்னலம் கடைசியில் 30
13. நிறுவனச் செய்திகள் 32




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆசிரியர் தலையங்கம்

ஓம் ஸ்ரீ சாயிராம்

# மலரும் பொற்காலம்

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அருளுரைகளின் போதும், பிரகடனங்கள் மூலமும் மலர்ந்து வரும் பொற்காலத்தை அறிவித்துள்ளார். பகவானின் சங்கல்பம் நடந்தே தீரும். ஆகவே அவரின் சில சங்கல்ப்பங்களை ஞாபகப்படுத்திக் கொள்வோம்.

"மனித குலத்தின் முழுமையான விடுதலைக்கு வழிகாட்டவே நான் அவதரித்துள்ளேன். இதற்கு மனி தனின் முயற்சியும் அவசியம்"

"இறைவனிடம் பூரண சரணாகதி யடைந்து பக்தி பூண்டு கொண்டு சகலரிடமும் அன்பு செலுத்தினால் பூரண அமைதியும் ஆனந்தமும் கிடைக்கும்."

"எனது கருட விமானம் பறந்து செல்ல ஆயத்தமாயுள்ளது. தயாராகி ஆயத்தமானவர்கள் ஏறி பயணத்தின் இலக்கை அடைவார்கள். தயாரில் லாதவர்கள் நிலத்தில் விடப்பட்டு விடுவார்கள்."

"எனது உடம்பு 96 வருடங்கள் நீடிக்கும். இளமையாகவே இருக்கும் எனது மகிமையும் பிரகாசமும் வளர்ந்து கொண்டே போகும் பிரகாசம் இப்பூவுலகை மாத்திர மல்ல மற்றைய கோளங்களையும் சுற்றி வளைக்கும்"

"இறுதியான 12 வருட காலத்தில் சகல மதத்தவர்களும் என்னை ஏற்றுக் கொள்வார்கள்."

"முனிவர்கள், யோகிகள், ரிஷிகள் பிரசாந்தி நிலையத்தை நோக்கிப் படையெடுப்பார்கள். மானிட எழுச்சிக்கு என்னுடன் சேர்ந்து வேலை செய்வார்கள். இத்துடன் அடியார்களும் கோடிக் கணக்கில் கூடுவார்கள். இங்கே கண்ணால் பார்க்கும் எண்ணிக்கையிலும் பார்க்க மிகவும் அதிகமான ஆன்மாக்கள் ஆன்மலோகத்தில் என்னிடம் வர ஆர்வமாயுள்ளார்கள். அவர்களையும் ஈடேற்றுவேன். இப்போதய மண்டபம் எல்லோ ரையும் அடக்கப் போதாமல் வரும். ஆகாயமே மண்டபத்தின் கூரையாக விளங்கும் நான் காரிலோ விமானத்திலோ போய் வர முடியாதளவுக்கு சன நெருக்கடி ஏற்படும். ஆகாயத்தில் நேரே நான் தோன்றி அசையவேண்டி வரும். இது நிகழும் பொற்காலத்தில் மானிட நேயம் மேலோங்கும். சகோதரத்துவம் இறையாட்சியும் பரவியிருக்கும்."

"கதியற்றவர்கள் வறுமையால் வாடுபவர் களையும் மீட்பேன். இதில் அடியார்களை ஈடுபட வைப்பேன். எனது சங்கற்பத்தால் நொடிப் பொழுதில் மாற்ற முடியும். ஆனால் மனிதர் திரும்பவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய நிலைக்கு மாறி விடுவார்கள்.''

“மெல்ல மெல்ல மானிடத்தில் உன்னத மாற்றத்தை ஏற்படுத்தி விழிப் புணர்வை மேல் நிலைக்கு எழத்தூண்டி அகங்காரத்தை நிர்மூலமாக்கி விடுதலை யடையச் செய்வேன். இக்காலத்தில் சாதி மத இன பேதம் ஒழிந்து எல்லோரும் ஒன்றே என்ற ஒருமைப் பாங்கு நிலை நாட்டப்படும்”

“பொற்காலத்தை ஏற்படுத்த மூன்று அவதாரங்கள் எடுக்க வேண்டியிருந்தது. தற்போதுள்ளது இரண்டாவது அவதாரமா-கும். சீரடி சாயி அவதாரத்தின் போது செய்யும் தொழிலே பிரார்த்தனையென்று வெளிக்காட்டப்பட்டது. இந்து முஸ்லீம் ஒற்றுமை வலியுறுத்தப்பட்டது. சத்திய சாயி அவதாரம் எல்லோரும் ஒன்றே என்பதை நிலை நாட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது. வரும் அவதாரம் பிரேம சாயி எல்லோரும் கடவுளே என்பதை நிலை நாட்டும். இக் காலத்தில் பொற்கால எழுச்சி உச்சி நிலையில் இருக்கும். பிரேம சாயியை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள்.”

“சீரடி சாயி உணவு சமைக்க ஆயத்தம் செய்தார். சத்திய சாயி உண-வைச் சமைத்தார். பிரேம சாயி உணவைப் பங்கிடும் வேலையிலீடுபடுவார்.”

“கலியுகத்தில் விடுதலைப் பேற்றை யடைவது மிகவும் சுலபம். முன்னைய யுகங்களில் நீண்டநாள் கடுமையான சாதனை யின் பின்பே இறைதரிசனம் கிடைத்தது. அவதார நிகழ்வினால் நாம் இறைதரிசனத்தை மிகவும் இலேசாகப் பெற்று விடலாம். உறுதியான விருப்பம் எழுந்தாலே சுவாமியின் கிருபை அவரின் அருகாமையை இழுத்து விடும். கலியுகத்திற்குப் பொருத்தமான சாதனை இடைவிடா நாமஸ்மரணையும், தாராளமான கொடையுமேயாகும். நாம் எல்லோரும் இச் சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது. நாம் விழித்தெழுந்து அனைவரையும் நேசித்து அனைவருக்கும் சேவை செய்து, எப்போதும் உதவி செய்து. ஒரு போதும் தீங்கு செய்யாமை மூலம் ஆன்மீக விடுதலை என்ற ஒப்பற்ற பரிசை பகவானிடம் இருந்து பெறுவோமாக.”

**“ சாயி யுகம் பொற்காலம்”**

ஜெய்சாயிராம்

- ஆசிரியர்




அடுத்த இதழ் கிழக்கு மாகாண விசேட இதழாக வெளி வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# மதங்கள் பற்றிய சுவாமியின் பார்வை




"Caste of humanity"

"Religion of love"

"Language of heart"


மனித வாழ்வில் உள்ள வேறுபாடுகளைக் களைந்து அவர்களிடையே ஒற்றுமையை உருவாக்கி தலை சிறந்த சமுதாயமாக மாற்றுவதே மதங்களின் நோக்கம். இந்த சத்தியத்தை உணர்ந்து புரிந்து கொள்வது ஒவ்வொருவரின் கடமையாகும். அனைத்து மதங்களின் சாரமும் அனைத்துப் புனித நூல்களின் மூலமும், அனைவரும் இறுதியில் அடையும் இலக்கு ஒன்றே! ஆனால் மனிதன் தன் சுயநலத்தாலும், குறுகிய நோக்காலும் மதத்தைக் கருவியாகக் கொண்டு கலகத்திலும், சண்டைகளிலும் ஈடுபடுகின்றான்.

எல்லா மதங்களும், நல்லனவற்றையே போதிக்கின்றன நாம் தான் நல்லறிவுடன் நடந்து கொள்ள வேண்டும், நம் மனம் நல்லதாய் இருந்தால் எந்த மதம் தீமை மிகுந்தது? எல்லா மதங்களுக்கும் ஆதாரமான முக்கிய தத்துவங்கள் ஒழுக்கம், தானம், தர்மம், சத்யம், பாரம்பரியக் கலாச்சாரம், சகிப்புத் தன்மை மற்றும் அஹிம்சை முதலானவை. இத்தகைய உண்மைகளை எல்லா மதங்களும் அங்கீகரிக்கின்றன. ஆனால் பண்டைய காலத்திலிருந்தே இந்த ஒற்றுமைகளை மறந்து விட்டு வேறுபாடுகளையே நினைத்து மதங்கள் வளர்ந்து வந்திருப்பதால் மனித வாழ்க்கையில், தெய்வீகத்தில் இருக்கும் ஒற்றுமையைப் புரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது.

கடவுள் ஒருவரே. நாம் அவரை யேசு, யகோவா, புத்தர், அல்லா, சிவன், கிருஷ்ணா, ஜொராஷ்டிரர், மகாவீரர், குருநானக் என வேறு வேறு பெயர்களால் அழைக்கின்றோமே தவிர கடவுள் வேறு வேறானவர் அல்ல. நாம் அழைக்கின்ற பெயர்களுக்கேற்ப அவர் வடிவங்களை எடுத்துக் கொள்கின்றார்.

உதாரணமாக ஒரு டம்ளரில் நீர் இருக்கின்றது. தமிழில் அதனை தண்ணீர் என்றும், ஆங்கிலத்தில் வோட்டர், சிங்களத்தில் வத்துறு, ஹிந்தியில் பாணி, சமஸ்கிருதத்தில் வாரி, தெலுங்கில் நீர் என்றும் அழைக்கிறார்கள் எல்லாப் பெயர்களுமே வேறு வேறாக இருந்தாலும் அவை எல்லாம் ஒன்றையே குறித்து நிற்கின்றன.

இதயமே இறைவன் வாழும் இல்லம். ஒவ்வொருவரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் இதயத்தினுள் தெய்வத்தைக் காணக் கற்றுக் கொள்ள வேண்டும். மனிதன் இவற்றைச் சரிவரப் புரிந்து கொள்ளும் வரை அவனுக்கு தெளிவு ஏற்படப் போவதில்லை. பக்தி யென்பது

"ஒருவரையும் புண்படுத்தக் கூடாது.
யாரையும் விமர்சிக்கக் கூடாது
யாரையும் ஏமாற்றக் கூடாது
யார் மனதையும் நோகடிக்கக் கூடாது
நீயும் புண்படாமல் பார்த்துக் கொள்"

இவற்றைவிட உயர்ந்த பக்தி வேறெது வுமில்லை.

சுவாமி சொல்கிறார் I and you are one. அது தான் தத்துவமஸி அதுவே அகம்பிரம்மாஸ்மி. இந்த சத்தியத்தையே பைபிள், குரான், வேதங்கள், கிரந்தங்கள் என்ற எல்லாப் புனித நூல்களும் போதிக்கின்றன. "எந்த மதத்தையும் வெறுக்காதீர்கள், எந்த மதத்தையும் இழிவு படுத்தாதீர்கள், மதங்களிடையே ஏற்றத் தாழ்வு காணாதீர்கள்" (எல்லோரும் ஒன்றே, எல்லோரிடமும் ஒன்றாக நடப்போம்) இந்த சத்தியத்தை உலகம் முழுவதும் பரப்புங்கள், கடவுள் எங்குமிருக்கிறார். அனைவரும் தெய்வ வடிவினரே. இந்த அடிப்படைத் தத்துவத்தை திடமாக வைத்துக் கொள்ளுங்கள். இவ்வுண்மையை எங்கும் பரவ விடுங்கள். இதுவே உண்மையான சேவை. இதுவே உங்களை இறைவனருகில் இழுத்துச் செல்லும் படகு. இந்த சம்சாரக் கடலில் பயணம் செய்து, இறைவனை நெருங்க இதனைப் பயன்படுத்துங்கள்.

ஜெய் சாயிராம்

கவிதா.த
திருகோணமலை

## நன்றியறிதல்


நன்றியறிதல் தெய்வீகப் பண்பு. ஸ்வாமியின் செயல்களில் இது மிகுந்து காணப்படுகிறது, பல வருடங்களுக்கு முன்னர் பாபா சில பக்தர்களுடன் கூட ஹார்லி குன்றுகள் என்ற இடத்தில் தங்கினார். இந்த வனப்பு மிகுந்த இடம் கடலுக்கு மேல் 3800 அடி உயரமுள்ளது.

குன்றுகளுக்கிடையில் இருந்த அந்த முகாமுக்கு ஜீப் மூலந்தான் செல்ல முடியும். குன்றுகளின் அடிவாரத்திலிருந்த சிறு குடிசைகளிலிருந்துதான் உணவையும் நீரையும் கிராமத்தாரால் கொண்டு வர முடியும். பங்களாவில் இருந்த ஒரு எருமை மாடு, அதன் முதுகில் தொங்க விடப்பட்ட தோற்பைகள் மூலம் மேலும் கீழும் தண்ணீர் சுமந்தது பாபாவுடன் இனிய மொழிகளைக் கேட்டுக் கொண்டு, இந்த நாட்களை அமைதியாக, மகிழ்ச்சியுடன் அனுபவித்து அனைவரும் மகிழ்ந்தனர்.

திரும்பிச் செல்லும் நேரம் வந்த போது பாபா "அனைவரும் நடந்து கீழே செல்லலாம்." என்று கூறினார். திடீரென்று ஓரிடத்தில் நின்று "காத்திருங்கள் ஒரு நிமிடத்தில் வருகிறேன். மிக முக்கியமான பிரமுகர் ஒருவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வருகிறேன்." பக்தர்கள் சிலர் சத்தமில்லாமல் பாபாவை பின் தொடந்தனர். அவர்கள் பாபா எருமையிடமிருந்து விடை பெறுவதைக் கண்டனர். அவர் அதை அன்புடன் தட்டிக் கொடுத்து "தங்கமே (பங்காரு) எனக்கு நீ நல்ல சேவை செய்தாய்" என்றார். மிகவும் நுண்ணிய சிறிய சேவயாக இருந்தாலும் பாபா அதனைக் கவனித்துப் பாராட்டுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்




# இது ஒரு பொற்காலம்

ஆயிரம் காலங்கள் தவமிருந்தாலும்
ஆரறிவார் சாயீசன் உண்மையை இங்கு
ஆராய முற்படும் ஞானிகள் இங்கே
அதையும் அறியாப் பிறவிகள் அங்கே


அன்புக்கு இலக்கணம் அவனே வகுத்தான்
அன்புக் கரங்களை நீட்டியே அணைத்தான்
அன்புடன் அருளும் அவனது அருளுரை
அகிலமே அறியும் யாவும் உண்மையே

கண்டவை கேட்டவை பலகோடி அற்புதம்
கலியுகம் வியக்கும் சாயீசன் லீலைகள்
தீராத நோய்களும் தீரும் அதிசயம்
கர்மவினைகளும் கரைந்து போகுமே

கடவுளைக் குருவாய் அடைந்தவர் நாங்கள்
சாயீசன் காலத்தில் வாழ்கிறோம் இங்கே
கலங்கவும் வேண்டாம் கவலையும் வேண்டாம்
கண்கண்ட தெய்வத்தை கைவிட வேண்டாம்

காலங்கள் மாறலாம் யுகம்பல பிறக்கலாம்
கடவுளின் கரங்களைப் பற்றியே பிடிப்போம்
நடமாடும் தெய்வத்தின் மகிமையை உணர்வோம்
இது சாயீசன் காலம் இதுவே நமக்கு ஒரு பொற்காலம்

ஜெய் சாயிராம்



ஸ்ரீ.ந.ஜெகநாதன்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# தன்னலமற்ற சேவையே இறைவனை அடையும் பாதை





மனமுவந்து செய்யும் தன்னலமற்ற சேவைக்கு, ஸ்வாமி பெரும் மதிப்பு தருகிறார். அனைத்து ஆன்மீகச் சாதனை முறைகளிலும் சேவையே இணையற்று உயர்ந்ததாகும் என்று கூறுகின்றார். ஒவ்வொருவரும் அதிகார மிக்க பதவியை அடைய ஆசைப்படுகிறார்கள். அவர்களின் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டிய அவசியத்தை சிறிதளவும் அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. தன் கடமையையும், பொறுப்பையும் அறிந்த ஒருவனுக்கு நாளடைவில் தானாகவே பதவியும் அதிகாரமும் கிடைத்தே தீரும். ஆனால் தன் கடமையை உணராத ஒருவனுக்கு எப்போதுமே பதவி கிட்டாது.

நிலையான நடுத்தர சம நிலையை அடைவதற்கு சேவை ஒரு முக்கிய அம்சமாகும். குறுகிய, சுயநலச் சுவடு சிறிதும் இல்லாமல் சேவை செய்யப்பட வேண்டும். சேவை புரியும் எண்ணத்தில் அதற்குரிய பிரதி பலனை எதிர்பார்ப்பதன் சுவடு உட்புகுந்து பாழாக்கலாகாது. ஒரு முக்கியமான யக்ஞம் அல்லது யாகத்தைச் செய்வதைப் போல் சேவை செய்ய வேண்டும். மரங்கள் தம் கனிகளை பற்றற்ற மனப்பான்மையுடன் மற்றவர்களுக்கு அளிக்கின்றன. தன்மீது ஓடும் நீரை ஆறு பருகுவதில்லை.அது மற்றவர்களின் தாகத்தைத் தான் தணிக்கிறது. தன் கன்றுக்கென்று தயாராகும் பாலைப் பசு பெருந்தன்மையுடன் மற்றவர்கட்கு பயன்பட தியாகம் செய்கிறது. இதைப் போலவே சுயநல எண்ணம் எதுவும் இல்லாமல் பிறருக்குச் சேவை செய்ய வேண்டும். உன்னதமான மனிதர்கள் எனும் அந்தஸ்தை இப்படித்தான் பெறவும், காப்பாற்றவும் இயலும்.

மகத்துவமிக்க சேவை உணர்வு அகம்பாவத்தை அழிக்க வல்ல, நல்லதொரு மாற்றத்தை மனிதனுள் ஏற்படுத்த வல்லது. அது அன்பை ஊக்குவிக்கிறது. உலகம் பற்றிலிருந்து விடுவித்து தெய்வீகப் பாதைக்கு இட்டுச் செல்கிறது. சேவை, தெய்வீகம் என்றால் என்ன என்பதை விளங்க வைக்க வல்லது. சேவை, மனிதகுலத்திற்கு இன்பத்தையும், பேரானந்தத்தையும் தரவல்லது. சொல்லப் போனால், “சேவை-யே ஆன்மீக மார்க்கத்துக்கு முதற்படியாகும்”

தர்மத்தை மீண்டும் நிலை நாட்ட இறைவன் அவதரிக்கிறார் என்பது நாம் அறிந்த ஒன்று. இதுவும் உலகிற்குச் செய்யப்படும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையே. இறைவன் கிருஷ்ணனாக அவதரித்து அர்ஜுனனுக்குத் தேரோட்டியாக சேவையாற்றினார். அதுமட்டுமல்லாமல் நாள் முழுவதும் தேரோட்டியாக பணிபுரிந்த பின்னர் அவர் களைப்படைந்த குதிரைகளை ஆற்றுக்கு கூட்டிச் சென்று அவைகளைத் தேய்த்துக் குளிப்பாட்டவும் செய்தார்.

ராஜசூய யாகம் நடந்து கொண்டிருந்த பொழுது தனக்கும் ஒரு வேலை தருமாறு தர்மராஜாவிடம் கிருஷ்ணர் கேட்டார். கிருஸ்ணருக்கு உகந்த வேலை ஒன்றும் இல்லை எனவும், அப்படி ஒரு வேலை இருக்குமாயின் அவ்வேலை என்னவென்று தன்னிடம் கூறினால் அவ் வேலையைக் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் தர்மராஜா கூறினார். கிருஷ்ணர் தர்மராஜாவை அருகே சென்று முதுகில் தட்டிக் கொடுத்து, தனக்கு ஒரு சிறப்பான தகுதி இருப்பதாகவும் அத்தகுதிக் கேற்ற வேலையை தாம் செய்ய விரும்புவதாகவும் கூறினார். இதைக் கேட்ட தர்மராஜாவிற்கு விளங்கவில்லை. சிறப்புமிக்க தகுதி என்னவென்று கேட்டார். உணவு சாப்பிட்ட பின்னர் விடும் எச்சில் இலைகளை எடுப்பதற்கு போதிய தகுதி தனக்கு உள்ளதாக அவர் கூறினார். சாப்பிட்ட பின்னர் விடும் எச்சில் இலைகள் அசுத்தமானவை. அவைகளை எடுக்காவிடில், மக்களின் மனதில் அருவருப்பை ஏற்படுத்தும். இதைச் செய்வதன் மூலம் கிருஷ்ணர் பிறருக்கு மகிழ்ச்சியையும் இதமான உணர்வையும் அளிக்க முடியுமென்பதால் இவ்வாறு செய்ய முன் வந்தார்.

ஏதாவதொரு கஷ்டம் அல்லது துயரம் பிறருக்கு ஏற்பட்டால் அவர்கட்கு உதவிபுரிய முயலவேண்டும். வேலை செய்வதன் மூலமும், சுற்றுப் புறத்தை சுத்தமாக வைத்திருப்பதன் மூலமும் மட்டுமே சேவை செய்ய முடியுமென்பதில்லை. வார்த்தைகளின் வழியாகவும் சேவை புரியலாம். நல்ல வார்த்தைகளின் வழியாகவும் அவர்களின் இதயத்தை இதமாக்கலாம். நற்செய்கைகளின் வழி அவர்களின் மனதை திடமாக்கலாம். நீ சேவை செய்கையில் உனக்குள் திறமைகள் குறித்து கர்வம் கொள்ளாதே அடக்கமாக இரு. இறைவன் சேவை செய்வதற்கு உனக்கு ஏதோ ஒரு வாய்ப்பு அளித்துள்ளான் என நினைத்துக் கொள். பிறருக்கு எதைச் செய்தாலும் அது உனக்கு நீ செய்து கொண்ட சேவை என எண்ண வேண்டும். உண்மையில் பிறருக்கு நீ செய்யும் எந்தவொரு சேவையும் உனக்கே செய்து கொண்டதாகும். ஆகவே நீ செய்யும் நன்மை நீ உனது எதிர்காலத்திற்கு சேமிக்கும் சேமிப்பாகக் கருத வேண்டும். நீ செய்யும் காரியம் நல்லதும், கெட்டதும் அதை உனக்கே நீ செய்து கொள்ளும் காரி யமாக நினைத்துக் கொண்டால் உனக்கு நீ எப்போதுமே கெடுதல் விளைவித்துக் கொள்ள மாட்டாய்.

பகவானது போதனைகளின் சாரமாக அமைவது "Love All, Serve All" மற்றும் "Help Ever, Hurt Never" என்பது. "நேசிப்பது என்பது மனிதப் பண்பு", "மற்றவர்களுக்கு சேவை புரிதல் என்பது நம் பிறவியின் கோட்பாடு" "உதவுதல் என்பது மனித நேயம்" "மற்றவரை நோக வைக்காமலிருப்பது என்பது நற்குணம்"

மேலே விவரிக்கப்பட்ட எல்லாமே நம்மிடம் உள்ள குணவிசேஷங்கள் தான். இருந்தாலும் சுயநலம் காரணமாக நாம் இவற்றைக் கடைப்பிடிக்க ஆர்வம் கொள்வதில்லை. ஆகவே சேவை புரிதல் என்பது முள்ளை முள்ளால் விலக்குதல் என்பதைப் போல, வினைகளை வினைகள் புரிந்து களைதல் என்பதாகும். சுயநலமற்ற நல்ல சேவைகள் செய்யப்படும் போது நாம் பல பிறவிகளில் செய்துள்ள கெட்ட வினைகள் (துஷ்கர்மா) களையப்படுகின்றன.

சேவை புரிதல் என்பது நம்மிடம் அகங்காரமற்ற தன்மையை ஏற்படுத்துகிறது. மன மகிழ்ச்சியைத் தருகிறது. சேவையால் மனதளவில் ஒருவித சாந்தி ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை புரிதல் என்பது ஒருவருக்கு எளிமையைக் கற்றுத்தருகிறது. சேவை புரியும் போது மற்றவரின் மகிழ்ச்சியை நாம் பார்க்கிறோம். அதனைப் பகிர்ந்து கொள்கின்றோம். இதன் மூலம் நம்மிடம் கருணை பிறக்கிறது, அத்துடன் மன அழுக்குகள் சிறிது சிறிதாய் நீக்கமடைகின்றன. நல்ல எண்ணங்கள் துளிர்விடுகின்றன பல தலைவர்கள் சமூகசேவை செய்ய விரும்புகிறார்கள். துடைப்பத்தை எடுத்து, வீதிகளை பெருக்கி, படப்பிடிப்பாளரைக் கூப்பிட்டு அவர்கள் துடைப்பத்தைக் கை-யில் பிடித்துக் கொண்டிருக்கும் போது படம் எடுக்கச் சொல்லி, அடுத்த நாள் அந்தப் படம் பத்திரிகையில் வரும்படி பார்த்துக் கொள்கிறார்கள். இம்மாதிரியான விளம்பரத்தைத் தேடி யாரும் செல்லக் கூடாது. இதயத்தின் ஆழத்திலிருந்தே எல்லாச் சேவையும் உதயமாக வேண்டும்.

ஸ்வாமி கணக்கற்ற சேவைப் பணித் திட்டங்களை மேற் கொண்டிருக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தில் தன்னலமற்ற சேவைக்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்ள முன் வந்தால், கடவுளின் அருள் அவனுக்கு கிட்டும் என்பதில் சந்தேகமில்லை. துன்பமுற்றோர், வறியோர், அவசியத் தேவையுள்ளோர் யாராயினும் கிராமத்திலோ, யாத்திரை செல்லுமிடத்திலோ, வேறு எந்த இடமாயினும் மனம் கோணாது சேவை செய்யுங்கள். பொதுவாக தண்ணீருக்கு விலையேதுமில்லை. ஆனால் பாலுடன் சேரும் போது தண்ணீரின் மதிப்புக் கூடுகிறது. அதே போல் ஸ்வாமியின் புனிதச் செயல்களில் ஏதாவது ஒன்றுடன் உனது சேவையும் சிறிதளவு சேர்ந்தால், நீ செய்யும் சேவையின் பயன் அதிக கனமும் பரிமாணமும் உட்சிறப்பும் கொண்டதாகிறது.

என்னை மகிழ்வித்து எனக்கு நிறைவு தரவேண்டுமெனில் ஒவ்வொரு உயிரி லும் என்னைக் கண்டால் போதும், எனக்கு சேவை செய்வது போலவே என்னை வழி படுவது போலவே அனைத்து உயிர்களுக்கும் சேவை செய். இது மட்டும்தான் மிகவும் பொருத்தமான வழிபாட்டு முறையாகும். இது மட்டுமே உன்னை என்னிடம் கொண்டுவரும் புனிதமான வழியாகும். என்று ஸ்வாமி கூறுகிறார். சேவைப்பணியில் இணைவதற்கு எம்மைத் தயார்படுத்தி அவரது அருள் மழையில் நனைவோம்.

ஜெய் சாயிராம்

ஸ்ரீமதி.ரதிதேவதி.ஜெ

மட்டக்களப்பு.

**எல்லோருக்கும் நல்ல நண்பனாக நடந்து கொள்ளுங்கள்.**

**- பாபா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# உள்ளிருந்து வழிகாட்டும் பாபா





இவ்வுலக மக்கள் தங்கள் குறுகிய கால வாழ்க்கையில் இரண்டு விடயங்களை அடைய விரும்புகின்றனர்.

1. தங்களின் பிரச்சினைகள், கவலைகள், துயரங்கள் என்பனவற்றைக் குறைப்பது.
2. தங்களின் இன்பத்தையும், சந்தோஷத்தையும் பெருக்கிக் கொள்வது.

இதன் காரணமாக மக்கள் தொடர்ச்சியான பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதோடு தேவைகளுக்காக கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. இதற்கெல்லாம் மூலம் மக்கள் முந்திய பிறவிகளில் செய்த வினைகளின் பலனே யாகும். இதைத்தான் சஞ்சிதம் என்கிறோம். இப்பழைய வினைத் தொகுதியிலிருந்து ஒரு பகுதியை இப்பிறவியில் அனுபவிப்பதற்காக மனிதன் கொண்டு வந்துள்ளான். அது பிராரப்தம் எனப்படும். மனிதன் இவ்வுலகிற்கு வரும் போது எதையும் கொண்டு வருவதில்லை. இருந்தாலும் மாயை, அதன் கருவியான மனம் என்னும் இரண்டையும் மனிதன் தன்னுடன் கொண்டு வந்துள்ளதாக பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா கூறியுள்ளார். வேதாந்த தத்துவத்தில் மாயைக்குப் பிரதான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் வேதாந்தத்தை மாயா வாதம் எனக் கூறுவதுண்டு.

மனிதனை மீண்டும் பிறவிக் கடலில் ஆழ்த்துவது ஆசையே ஆசையைப் போல் பெரிய பாவமும், திருப்தியின்மையைப் போல் பெரிய சாபமும் இல்லை எனக் கூறப்படுகின்றது. எனவே எவர் ஒருவர் தன்னிடமிருப்பதைப் போதுமானதெனக் கருதுகிறரோ அவர் எப்போதும் போதுமானதை வைத்திருப்பார் என பாபா கூறியுள்ளார். ஒருவரின் ஆசைகள் நிறைவேற்றப்பட்ட பின் அவர் சந்தோஷமாக இருப்பார் என மக்கள் பிழையாகக் கருதுகின்றனர். ஆசைகள் கட்டுப்பாட்டினுள் வந்த பிறகுதான் சந்தோஷம் கிடைக்கும். ஆசைக்கான வேறு பெயர் மனம். ஆசை இல்லாவிட்டால் மனம் இல்லை. இம்மனம் தான் ஆத்மாவை மறைக்கிறது. உண்ணல், உறங்கல், அருந்தல் போன்ற சில ஆசைகள் வாழ்க்கைக்குத் தேவையானது தான். ஆனால் இவ்வாசைகள் மறு பிறவிக்கு வழிவகுக்காது என ரமண மகரிஷி கூறியுள்ளார். செல்வம், குடும்பம் என்பன தான் தனது பற்றுதல்கள் என்றும் அவற்றைக் கைவிட்டால் விடுதலையடையலாம் என மனிதன் பிழையாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிக் கொண்டிருக்கிறான். ஆனால் இவையெல்லாம் மனிதனின் உண்மையான பற்றல்ல. உடல்மேல் ஆவனுக்குள்ள ஆசை தான் உண்மையான பற்று. எனவே மனிதன் தன்னைப்பற்றி அறிய வேண்டும். தன்னைப் பற்றி அறிவதென்பது தனது ஆத்மாவைப் பற்றி அறிவதே. எனவே ஆத்மாவைப் பற்றி அறிவதும் தன்னைப்பற்றி அறிவதும் ஒருவரின் முக்கிய பொறுப்பு. உடல் செயற்படுகிறது. மனம் எது சரி எது பிழை எனப்பிரித்துணர்கிறது. ஆத்மாவானது சாட்சியாக மட்டும் இருக்கிறது. இவை மூன்றும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுவது போல் தோன்றினாலும் அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப் பட்டுள்ளது. இவை ஒன்றிணைக்கப்பட்டு இசைவு ஏற்பட்டதும் மனிதன் தன்னிறைவு பெறுகிறான்.

ஒவ்வொருவருள்ளும் இருக்கும் தெய்வீகம் பற்றிய உண்மையை அறிவதே பக்தி. பக்தியும் ஞானமும் ஒரு வண்டியின் இரு காளைகளைப் போன்றன. இரண்டும் ஒன்று சேர்ந்தே இழுக்க வேண்டும். ஞானம் பக்தியை மேம்படுத்த உதவ வேண்டும். பக்தி ஞானத்தின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும். அமைதி, இன்பம், திருப்தி, ஞானம் என்பவற்றை மக்களின் அல்லது பொருட்களின் மத்தியில் தேடுவதை நிறுத்தி உங்களின் உள்பார்வையை விருத்தி செய்து தன்னுள் உறையும் தெய்வீக சக்தியை அறிய முயற்சிக்க வேண்டும். இதை அறி யாது மனிதன் தன்னையொரு பலவீன மானவனாகவும், உதவியில்லாதவனாகவும் நினைத்து மாயையில் வாழ்ந்து கொண்டிருக் கிறான். அவனைவிட ஒரு உயர்வான சக்தி வெளியில் இருப்பதாக ஊகித்துச் சிலர் இறைவனைக் காணக் கானகம் செல்கின்றனர். உன்னுள் இருக்கும் இறை வனைக் காணக் கானகம் செல்வதென்பது எவ்வளவு மடமைத்தனமானது. இறைவனும் நீயும் ஒன்று என்பதுதான் உண்மை என பகவான் கூறியுள்ளார். கலியுகம் விடுதலை யைப் பெறுவதற்கான உகந்தகாலம் எனக் கருதப்படுகிறது. எனவே காலத்தை வீணடிக்காது ஆன்மீகப் பாதையில் நேரகாலத்துடன் காலடி வைப்பதே சாலச் சிறந்ததாகும். பதினாறு தொடக்கம் முப்பது வரையிலான வயது ஆன்மீக வாழ்க்கையைத் தொடங்கப் பொருத்தமானது என பகவான் கூறுகிறார்.

புட்டபர்த்திக்குச் சென்று பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவை தரிசிப்பவர்களுக்கு மட்டும்தான் அவரின் கருணை கிட்டுமா? எனும் ஐயப்பாடு பரவலாக மக்களிடையே தற்போது ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இவ்ஐயப்பாட்டை நீக்கும் வகையில் பகவான் ஒரு செய்தியைத் தந்துள்ளார். அதாவது நான் எனது ஸ்தூல உடலில் புட்டபர்த்தியில் காட்சி கொடுக்கிறேன். அதே நேரத்தில் எனது சூக்கும உடலில் அனைவரி னதும் இதயத்தில் எப்போதுமே இருந்து கொண்டிருக்கிறேன். எனவே எனது கருணை-யை அவர்கள் இருக்குமிடத்திலிருந்து கொண்டே பெறலாம் என்பதில் ஐயமில்லை.

ஜெய் சாயிராம்

கு.ஆறுமுகம்
தாமரைக்கேணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்





# திருஓணம் - திருவோணம்

இப் பண்டிகை கேரளத்தில் சாதிமத பேதமின்றி அனைவராலும் பத்து நாட்களுக்குக் கொண்டாடப் படுகிறது. இந்தப் பண்டிகையைக் கொண்டாடுவதற்காக உலகின் பல பகுதிகளிலும் உள்ள கேரள மக்கள் கேரளத்தில் ஒன்று கூடுகின்றனர். திருவோணம் விஷ்ணு வுக்கும் திருவாதிரை உருத்திர ருக்கும் உரியது. 27 நட்சத்திரங் களுள் இவ்விரு நட்சத்திரங்களின் பெயர்களின் முன் "திரு" எனும் சொல் சேர்வதால் அவை மேன்மைப்படுத்தப்படுகின்றன.

இப்பண்டிகை பற்றிய கதை மகாவிஷ்ணு புராணத்தில் காணப்படுகிறது. இந்திரசேனன் என்னும் அரசன் கேரளநாட்டை ஆண்டு வந்தான். அவன் மிக வலி-மை பெற்றிருந்தமையால் "மகா பலி" எனப் பெயர் பெற்றான். அவன் தன் குடிமக்கள் மகிழ்ச்சியாக வாழ வழி செய்தான். மக்களும் அரசன் மேல் அன்பும் மரியாதை யும் வைத்திருந்தனர்.

பலிச்சக்கரவர்த்தி பல யாகங்களைச் செய்து வந்தான். அசுரகுருவான சுக்கிராச்சாரியரின் உதவியுடன் "விஸ்வஜித்" என்னும் யாகத்தைச் செய்து, அதன் மூலம் மூவுலகையும் தனதாக்கிக் கொண்டான். இவனின் ஆட்சியில் பாதிக்கப்பட்ட தேவர்கள் திருமாலி டம் முறையிட திருமால் தேவர்களின் அன்னையான அதிதியின் வயிற்றில் ஆவணி மாத வளர்பிறைத் திரு வோண நட்சத்திரத்தில் பிறந்தார். பிறந்து சற்று நேரத்தில் 5 வயதுப் பாலகனாக வளர்ந்து விட்டார். அந்த நேரத்தில் மகாபலி ஒரு பெரிய யாகத்தைத் துவக்கினான். அந்த யாக காலத்தில் எவர் எதைக் கேட்டாலும் தரத் தயாராக இருப்பதாக அறிவிப்பு விடுத்தான்.

இந்த அறிவிப்பைப் பயன் படுத்தி விஷ்ணுவானவர் வாமன வடிவமெடுத்து யாகசாலைக்கு வந்தார். மகாபலி எழுந்து நின்று அவரை உபசரித்து வரவேற்று அவர் வந்த காரணத்தை வி-னவினான். மூன்று காலடி நிலம் மட்டுமே தனக்கு வேண்டுமென வாமனர் கூறினார். வந்திருப்பவர் விஷ்ணுவே எனக் குருவான சுக்கிராச்சாரியார் எடுத்துரைத்துத் தானம் செய்ய வேண்டாமென்று வற்புறுத்தியும் வந்திருப்பது கடவுளே என உணர்ந்து, குரு விரும்பாவிட்டாலும் தானம் கொடுக்க ஒப்புக் கொண்டான். அத்தருணத்தில் தானம் செய்யும் நீர் இருந்த கிண்டியின் மூக்கை சுக்கிராச்சாரியார் வண்டாக மாறி அடைக்க அதைத் தற்பைப் புல்லால் வாமனர் குற்றி தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்கான நீர் வெளியில் வர வைத்தார். தற்பைப்புல் சுக்கிலாச்சாரியரின் கண்ணில் பட்டு அவர் குருடானார். தானம் நிறை வேறியதும் வாமனர் விஸ்வரூபமெடுத்து ஓர் அடியால் உலகையும் அடுத்த அடியால் ஆகாயத்தையும் அளந்து மூன்றாவது அடிக்கு இடமில்லாது போக மகாபலி தன் தலையைக் கொடுத்தார். பகவான் மகாபலி யின் தலையில் அடியை வைத்து பாதாள உலகிற்குத் தள்ளி விட்டார்.

மகாபலி பாதாள லோகத்திற்கு தள்ளப்பட்டதைப் பார்த்த அங்கிருந்த மக்கள் இனிமேல் எங்களை யார் கவனிப்பார் என மனம் வருந்தினர். அப்போது ஒவ்வொரு வருடமும் அத்தினத்தில் கேரளத்துக்கு வந்து மக்களைப் பார்ப்பதற்கான வரத்தை மகாபலி விஷ்ணுவிடம் பெற்றுக் கொண்டான். மகாபலி பிரகலாதனின் பேரன் என்ற காரணத்தினால் அவனிடம் பக்தி அடக்கம் காணப்பட்டன. ஆனால் அவனிடம் காணப்பட்ட அகங்காரத்தைப் பொடியாக்கவே சிரசில் பாதத்தை வைத்துப் பாதாளத்திற்கு பகவான் அவரை அனுப்பினார்.

இதன் மூலம் எங்களுக்குப் புலப்படும் உண்மை என்னவெனில் தெய்வத்தில் நம்பிக்கை ஏற்பட்டால் தெய்வத்துக்கும் பக்தனுக்கும் இடையில் யார் வந்தாலும் தூக்கி எறியப்படுவார்கள். பல சந்தர்ப்பங்களில் இதைக் காணலாம்.

1. மீரா தனக்கும் கிருஸ்ணனுக்கும் இடையில் நின்ற கணவனைப் பிரிந்தாள்.
2. பரதன் தனக்கும் இராமருக்கும் இடை யில் குறுக்கிட்ட தாயை ஒதுக்கினான்.
3. பிரகலாதன் இறைவனின் பெயரையே கூறக் கூடாதென்ற தந்தையைப் பிரிந்தான்.

ஜெய் சாயிராம்

பூ.சிவபாலன்
தாமரைக்கேணி.

## ஓ சாயி!

நான் உடலுடன் கூடிய மனிதன் என என்னை நினைக்கும் போது உனக்கு வேலைக்காரனாகிறேன். ஒரு தனிப்பட்ட ஆத்மாவாக என்னை நினைக்கும் போது நான் உன்னுடைய ஒரு பகுதியாகிறேன். ஆனால் நான் என்னை ஆத்மனாக உணரும் போது உன்னுள் ஐக்கியமாகிறேன்.

- ஒரு பக்தன் -

- ச.சா (து) மார்ச் 94 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# அடியேன் வாழ்வில் சாயி நாதன் ....





அவனருளாலே அவன்தாள் வணங்கி என்று நமச்சிவாயப் பதிகம் கூறுவது போல, இப்பிறவியில் பகவானின் அடியின் கீழ் நாம் வாழ்வதற்கு முற்பிறப்பில் நாம் செய்த புண்ணியம் தான் காரணமென நான் அடிக்கடி நினைப்பதுண்டு. என்வாழ்க்கையில் ஒவ்வொரு தடவையும் பகவான் தன் கருணையைப் பொழியும் பொழுது ஒரு தாயின் பரிவை நான் உணர்வதுண்டு. நினைத்துப் பார்த்தால் மெய் சிலிர்க்கும்.

அடியேனைப் பொறுத்த வரை அறியாத சிறுவயதிலேயே அதாவது 11 வயதிலேயே சுவாமி யின் அருள்கடாட்சம் ஆரம்பமாகி விட்டது. அதாவது 1969 ஆம் ஆண்டு நாம் யாழ்ப்பாணத்திலிருந்தகாலம். எமது சொந்த இடம் தெல்லிப்பழை. எனது தந்தையார் வேலை விடயமாக கொழும்புக்குச் சென்று வந்த போது தனது நண்பர் ஒருவர் தந்ததாக பகவானின் கறுப்பு வெள்ளைப் படம் ஒன்றைக் கொண்டு வந்து, பிரேம் போட்டு சுவாமி அறையில் மாட்டி விட்டார். யாழ்ப்பாணத்தில் டாக்டர். சோமசுந்தரம் ஐயா அவர்கள் வீட்டுக்கு இடைக்கிடை பஜனைக்கு செல்வோம். போக்குவரத்துக் கஷ்டம் ஆகையால் ஒவ்வொரு கிழமையும் செல்வது கிடையாது. பகவானுடன் அந்நேரம் அவ்வளவு தூரம் ஈடுபாடும் குறைவு என்று தான் சொல்ல வேண்டும்.

1971 ஆம் ஆண்டு எனது உறவினர் இந்தியாவுக்குப் போன இடத்தில் பகவானைப் பற்றிக் கேள்வியுற்று, புட்டபர்த்தி சென்று வரும் போது எமக்கு ஒரு பெரிய நிறப் படம் (சிவப்பு ஆடை) கொண்டு வந்து தந்து, பகவானைப் பற்றிக் கூறி தாம் இனிமேல் மாமிசம் உண்ணப் போவதில்லையென்றும் கூறினார். அதைக் கேள்வியுற்று நானும் இனிமேல் மாமிசம் உண்பதில்லையென்று உறுதி பூண்டேன். வீட்டில் எல்லோரும் மாமிசம் உண்பார்கள். அதுவும் எனக்கு 11 வயதிலிருந்து இதய வால்வு சுருக்கம் (Rhumatic heart disease) உடல் மிகவும் பலவீனம். குடும்பத்தில் ஒரே வற்புறுத்துவார்கள். அச்சிறு பிராயத்திலேயே பகவான் என்னைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை வலுப்பெற்றிருந்தது.

1972 ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து வந்து, டாக்டர் கதிரேசன் ஐயா அவர்கள் காங்கேசன்துறையில் ஒரு சாயி மண்டலியை ஆரம்பித்து வைத்தார். ஒவ்வொரு வியாழக்கிழமைகளி லும் நாம் அங்கு சென்று பஜனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வோம். காங்கேசன்துறையிலிருந்து தெல்லிப்பழைக்கு பஜனை முடிந்து திரும்பி வரும் போது பஸ் கிடைப்பது கஸ்டம். எனது தாயார் மூத்த மூன்று சகோதரிகள் நான் ஐவரும் நடந்து வருவோம். இரவு நேரத்தில் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு தினங்களில் அயலவர்களைக் கூப்பிட்டு வீட்டில் பஜனை செய்வோம். எனது சகோதரி சங்கீதம் கற்பதால் ஹார்மோனியப் பெட்டியும் பஜனையில் உபயோகிப்போம். வீட்டில் மாமியின் சிறு பிள்ளைகள் ஹார்மோனியப் பெட்டியில் விளையாடுவது வழக்கம். அதனால் சுவாமி அறையைப் பூட்டி சாவியை கதவு நிலையில் தொங்க விடுவது வழக்கம். 1972 ஆம் ஆண்டு வைகாசி மாதம் ஒரு வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் சமையல் அறையில் சமையலில் ஈடுபட்டிருந்தோம். எனது தாயாரும் 3 சகோதரிகளும் நானும் தான் வீட்டிலிருந்தோம். மாமியின் பிள்ளைகள் பாடசாலை சென்று விட்டார்கள். சுவாமி அறையில் ஹார்மோனியப் பெட்டியின் ஓசை ஒரு சில நிமிடங்கள் கேட்டது. நாம் ஓடிச் சென்று பார்த்தோம். கதவு நிலையில் சாவி அப்படியே இருந்தது. கதவைத் திறந்து பார்த்தோம். ஒருவருமில்லை. ஆனால் அந்நாட்களில் பகவானின் அற்புதங்கள் இப்படி நடப்பது பற்றி எமக்கு எதுவும் தெரியாது.

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நாட்டு நிலமை மோசமடைய ஆரம்பித்தது. கெடுபிடிகள், ஷெல் அடி ஆரம்பமாகவே நாம் இடம்பெயர்ந்து நீர்வேலியில் தங்கியிருந்தோம். அச்சமயம் எனது முதல் பிள்ளை வயிற்றில் கருவுற்றிருந்த நேரம் அதே வருடம் எனது உறவில் ஒரு பெண்மணி என்னைப் போன்று இதயவால்வு சுருக்கம் இருந்தவர். குழந்தை பிறக்கும் போது இறந்து விட்டார். எனக்கு மிகவும் பயமாக இருந்தது. இவ் இதய நோய் இருப்பதால் குழந்தை பிறப்பதில் சிரமம் ஏற்படும் என்று ஒரு மாதத்திற்கு முதலே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கும்படி ஏற்கனவே வைத்தியர்கள் கூறியிருந்தார்கள். நாட்டு நிலைமை மோசமடைந்ததால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டு விட்டது. அங்கு காயப்பட்டோர் நிறைய அனுமதிக்கப்பட்டிருந்ததால் தற்சமயம் வரவேண்டாமென்றும், குழந்தை பிறக்கவுள்ள தினத்தில் வரும்படியும் கூறிவிட்டார்கள். 1990 ஆம் ஆண்டு ஆனி-மாதம் 13 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியளவில் நான் சத்யம், சிவம், சுந்தரம் புத்தகத்தை வாசித்தபடி அப்படியே உறங்கி விட்டேன். புத்தகம் கீழே விழுந்து விட்டது. கனவோ நினைவோ என்று தெரியவில்லை இனந்தெரியாத யாரோ 3 பேர் வந்து குழந்தை பிறப்பது தெரியாமல் பிறக்கும் பயப்பட வேண்டாம் என்று அவர் சொல்லச்சொன்னவர் என்று கூறினார்கள். அதே போன்று மின்சாரம்கூட இல்லாத நிலையில் ஜெனரேற்றர் மூலம் மினசாரம் பெறப்பட்டு, அறுவைச் சிகிச்சை மூலம் பிரசவம் ஆனது. பகவானின் ஏற்பாட்டின் பிரகாரம் குழந்தை பிறப்பது தெரியாமலே பிறந்தது. சாயிமாதாவின் கருணையை என்னவென்று சொல்வது?

2009 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி எனக்கு கோர்ணியா அறுவைச் சிகிச்சை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு முதல் சகல விதமான பரிசோதனைகளும் செய்யப்பட்ட போது கோர்ணியாவுக்கு முதல் இதய வால்வு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென்று கொழும்பிலுள்ள இருதய வைத்திய நிபுணர் எம்மைக் குழப்பத்திலாழ்த்தி விட்டார். பின்பு நாம் "அப்பலோ" ஆஸ்பத்திரியில் சென்று பரிசோதித்த போது தேவையில்லையென்று கோர்ணியாவுக்கு அறுவைச் சிகிச்சை செய்யலாமென்று கூறினார்கள். ஆனால் அறுவைச் சிகிச்சை முடிந்த பின்பு ஒரு முழுநாள் ICU வில் வைத்திருக்க வேண்டுமென்று கூறினார்கள். இக் குழப்பங்களைக் கேள்வியுற்று எனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரி வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார். அக்டோபர் 29 ஆம் திகதி வியாழக்கிழமை பஜனையில் எனது சகோதரியும், எனது மகளும் திருகோணமலை சாயி சமித்தியில் பாடுவதற்கு தயாராகவிருந்தார்கள். எனது சகோதரி எனது மகளிடம் "உனது அம்மா விரைவில் சுகமாகி விரைவில் பகவானின் சேவையைத் தொடர வேண்டு மென்று பகவானிடம் பிரார்த்தி" என்று கூறினார். எனது மகள் பாட ஆரம்பிக்கும் போதே பகவானின் படத்திலிருந்து பூ விழுந்து ஆசீர்வாதம் கிடைத்தது. நவம்பர் முதலாம் திகதி எனது அறுவைச் சிகிச்சை கொழும்பில் 35 நிமிடங்களில் முடிந்தது. ICU வில் விடவில்லை. நேரடியாக வார்டில் விட்டு, அடுத்த நாளே வீட்டிற்கும் அனுப்பி விட்டார்கள். பகவானின் அன்பு வெள்ளத்திற்கு அணை போட முடியுமா?

2009 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி நகர சங்கீர்த்தனம் முடிந்து பகவானின் பிறந்த தினத்தை முன்னிட்டு விசேட பஜனை சமித்தி மண்டபத்தில் நடந்து கொண்டிருந்தது. "சர்வதர்மம்" ஆண்கள் வரிசையில் பாடி முடிந்து விட்டது. அதன் பின்பு எனது மகளைப் பாடும்படி சைகை காட்டினார்கள். அவர் பாடிக் கொண்டிருக்கும் போது பகவானின் பூ மாலைகளில் ஒன்று யாரோ பிடித்து இழுத்தது போல இரண்டு பக்கமும் ஆடியது. எல்லோரும் ஆச்சரியப் பட்டார்கள். அதே மாதம் 2009 நவம்பர் 26 ஆம் திகதி எனது மகள் வைத்தியத் துறைக்குத் தெரிவாகி திருகோணமலை மாவட்டத்தில் 6 ஆம் இடத்தில் வந்தார். பகவான் முற்கூட்டியே தனது ஆசிகளை தெரிவித்து விட்டார், அவனின்றி அணுவும் அசையாது. சாயி நாதனை நம்பியவர்களை அவர் என்றும் கைவிடமாட்டார். என்பதை என்வாழ்வில் எத்தனையோ சந்தர்ப்பங்களில் உணர்ந்து விட்டேன் எல்லோரும் அவரின் போதனைகளின் படி நடந்து, அவரின் கட்டளைகளை ஏற்று அவரின் அன்பு மழையில் நனைந்து அவரின் பூரண ஆசியையும் அருளையும் பெற வேண்டுமென்பதே அடியேனின் பிரார்த்தனை.

"ஸமஸ்த லோகா சுகினோ பவந்து"

ஜெய் சாயிராம்

திருமதி.ராகினி சுந்தரலிங்கம்
திருகோணமலை

**" உலகியல் வாழ்க்கையில் ஈடுபடு. ஆனால் அது உன்னுள் நுழைய அனுமதிக்காதே!"**
**- பாபா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்




# சத்திய சாயி குடிநீர்த் திட்டங்கள்

பகவானின் முதல் உருவம் ஜலம். ஜலமின்றி மனிதன் உயிர்வாழ முடியாது. இது பூமியில் எங்கும் எல்லா இடங்களிலுமுள்ளது. ஆனால் சில இடங்களில் மட்டும் இது தேக்கங்களிலும், மற்றும் ஆறு, கடல் போன்றவற்றிலும் காணப்படு கின்றது. மற்ற இடங்களில் நிலத்தின் அடியில் உள்ளது. இந்த ஜலஸ்வரூபமாக எல்லாப் பிராணிகளையும் காத்து வருகிறார் கடவுள்.


"ஜலத்திற்கு மற்றுமொரு பெயர் ஜீவனம். கடவுள் திரிமூர்த்தி அவதாரங்களிலும் ஜலமாகவே காட்சியளித்துள்ளார்''.

- பாபா

சிவனின் தலையிலிருந்து கங்கையாக வெளிவருவதும் நீர்தான். கோவில்களில் தீர்த்தம் என்று எம்மைப் புனிதப்படுத்துவதும் அதுவே. சிவனின் அவதாரமாகிய ஷிர்டிசாயியின் காற்கட்டை விரலில் கங்கை பீறிட்டதும் அவர் தண்ணீரில் விளக்கெரித்து அதிசயிக்க வைத் ததும் நம் பாபா குடிநீர்த் திட்டங்களை செயற்படுத்துவதும் எல்லாவற்றிற்கும் மேலாக "நீரை வீண்விரயம் செய்யாதீர்கள்" 'மாசு படுத்தாதீர்கள்' என்று போதிப் பதும் நீரின் முக்கியத்து வத்தையே காட்டுகிறது.

புதுடில்லியில் ஜேர்மன் தூ தரகத்தில் பணிபுரிந்த அன்னை மேரி மரிவாஹா என்ற பெண்மணி ஒரு முறை புட்டபர்த்திக்கு வந்த போது ஸ்வாமியிடம் "ஸ்வாமி உங்களது அவதாரத்தின் உண்மையான நோக்கம் என்ன? என்னால் அதனைப் புரிந்து கொள்ள முடியவில்லையே" என்று கேட்டாள். உடனே ஸ்வாமி "நான் என்ன சொல்வது? சுருக்கமாகச் சொல்வதானால் நான் அனை வருக்கும் சேவகனல்லவா''என்றார். இந்தப் பதில் அவளை உலுக்கியெடுத்தது. அவள் அழுத வண்ணம் ஸ்வாமி ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்? என்று கேட்ட போது, ஸ்வாமி தெளிவாகக் கூறினார். "அன்புக் குழந்தையே! இது வெறும் சாதாரண உண்மை. ஒவ்வொருவரும் எனக்கு ஒரு வேலை கொடுக்கிறார்கள். ஒவ்வொருவரின் வேலைகளையும் செய்பவன் யார்? உண்மையில் அவன் அனைவருக்கும் சேவகன் அல்லவா?''

பகவானின் வார்த்தைகளும் செயல்களும் அது சின்னஞ் சி-றிய வயதிலாயிருக்கட்டும் அல்லது இந்த வயதிலாகட்டும் ஒன்றாகத்தான் இருக்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்வாமி சிறிய பையனாக இருந்த போது தொலை தூரம் சென்று குடிநீர் கொண்டு வந்தார். இப்போது புதிய சுத்தமாக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்திட்டம் கொண்டு வருகிறார். அந்தப் பழைய நாட்களில் அண்டை வீட்டினர் கேட்பார்கள். "அன்புடன் குழந்தாய், எங்களுக்கும் கொஞ்சம் குடிநீர் கொண்டு வருவாயா?" இப்போது அடுத்த மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் "பாபா எங்களுக்கும் குடிநீர் தருவீர்களா?" என்று இறைஞ்சுகின்றனர். முழுமையான அளவற்ற அன்புடனும் பரிவுடனும் அவர் கூறுகிறார். "நிச்சயம், நிச்சயம் தருகிறேன்." சிலர் புட்டபர்த்தியைப் பற்றி கேள்விப்பட்டிருப்பார்கள். ஆனால் அது எங்கிருக்கின்றது என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் விசாரித்து அங்கு எப்படிச் செல்வது என்பதனைக் கேட்டுத் தெரிந்து கொள்வர். அவர்களது கஷ்டத்தில் தெய்வீக அன்னையான பா-பாவைக் கண்டு அவரிடம் அடைக்கலம் கேட்க வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களை இரக்கமுள்ள அன்னை கைவிடுவதில்லை. "என் குழந்தைகள் என்னைத் தேடி வந்திருக்கிறார்கள். வயிறார உணவு கேட்டல்ல, ஒரு கோப்பை தண்ணீருக்காக" தாயின் பரிவோடு, பகவான் பதில் தருகிறார். "நிச்சயம் நிச்சயம் ஏற்பாடு செய்கிறேன்" இது ஒரு தாயின் அன்பல்ல. ஆயிரம் தாய்மார்களின் அன்பு. உண்மையில் இது ஆயிரம் தாய்மார்களின் அன்பு தான்.

ஒரு அரசாங்கத்தால் ஏன் ஒரு தேசத்தால் செய்ய முடியாததை ஸ்வாமி தனிப்பட்டவராக இருந்து சாதிக்கிறார். இதனால் பயனடைந்தவர்கள் அனைவரும் அவரது குழந்தைகள். அவர்களுடைய நன்மைக்காக அவர் செலவழித்தார். இன்னமும் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்கிறார். அனைத்தும் குடிநீர்த் திட்டத்திற்காக. மக்கள் நன்றி பாராட்டுகிறார்கள். ஆனால் இந்த அளவு கடந்த அன்பெனும் கடனை எப்போதாவது திருப்பிச் செலுத்த முடியுமா? ஸ்ரீ சத்திய சாயி குடிநீர்த்திட்டம் இதுவரை 750 கிராமங்களுக்கு மேல் 11 நகரங்களை எட்டியிருக்கிறது. தண்ணீர் 2500 கி.மீற்றர் தூரம் குழாய்கள் மூலம் கொண்டு வரப்பட்டு ஏறக்குறைய 10 இலட்சம் மக்களுடைய தாகத்தைத் தணிக்கிறது. இது நடந்திருப்பது ஆந்திரப் பிரதேசத்தில் ராயல்சீமா பகுதியில் ஒவ்வொரு மீட்டர் பைப்பிலும் பகவானின் அமரித்ம் போன்ற அன்பு தெரிகிறது.

1994-1996 இல் பகவானின் முதலாவது குடிநீர்த்திட்டம் அனந்தப்பூர் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக 300 கோடி ரூபா செலவழிக்கப்பட்டது. இதன் விளைவாக 900 இற்கு மேற்பட்ட கிராமங்கள் தூய குடிநீரைப் பெறும் வசதி யைப் பெற்றன. இத்திட்டத்திற்காக 7 பெரிய நீர்த் தாங்கிகளும் 2500 கி.மீற்றர் நீர்க்குழாய்களும் அமைக்கப்பட்டன. இக் குழாய்களில் சில 20 அங்குல விட்டமுடையவை. வடக்குத் திசையிலிருந்து தென் திசைக்கு 500 அடி சாய்வை மீறி நீர் கொண்டுவர வேண்டி இருந்ததால் அதிக விசையுள்ள பம்பிகள் பாவிக்க வேண்டியிருந்தது. இது ஒரு பாரிய திட்டம். இத்திட்டம் ஒரு-வருடம் நடைமுறைப்படுத்தப் பட்ட பின் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. ஒரு பைசாகூட இதற்காகப் பெற்றுக் கொள்ளப்படவில்லை. இது அன்புப் பரிசு.

அனந்தப்பூர் ஒரு தொடக்கமே. இதன் பின் 'மெடக்', 'மகபூப்நகர்' திட்டங்களும் இவற்றைத் தொடர்ந்து சென்னைத் திட்டமும் நடைமுறைக்கு வந்தன. தண்ணீர்ப் பிரச்சினை சென்னையைப் பொறுத்தவரை ஒரு நீண்டகாலப் பிரச்சினை. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் இது நிலவியது. இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆந்திராவிலுள்ள கிருஸ்ணா நதியிலிருந்து நீர் கொண்டு வருவதே சிறந்த வழி என்று 1954 இலேயே நம்பப்பட்டது. அதன் பின் அரசியல் தலையீடு ஏற்பட்டு 1983 இல் ஒரு திட்டம் தீட்டப்பட்டது. பிரபல அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்களான இந்திராகாந்தி, ராமராவ், எம்ஜிஆர். ஆகியோரின் தலையீட்டால் 12 ஆண்டுகளுக்குப் பின் கண்டலாறு பொன்டி வாய்க்கால் அமைக்கப்பட்டு இதன் மூலம் தெலுங்கு கங்கை திட்டத்தின் ஒரு பகுதி நிறைவேற்றப்பட்டது. ஆனால் இந்த வாய்க்கால் மண்ணால் கட்டப்பட்டதால் 150 கிலோ மீற்றர் தூரத்திற்க நீரைக் கொண்டு வர உகந்ததாக இருக்கவில்லை. மண் கரைதல், நீர் வடிதல் போன்ற காரணி களால் மண் அரிப்பு ஏற்பட்டதால் மிகக் குறைந்தளவு நீரே சென்னையை அடைந்தது. 500 கோடிக்கு மேல் செலவழித்தும் சென்னையின் தாகம் தீர்ந்தபாடில்லை. தை 19, 2002 இல் சென்னைக்கு நீர் கொண்டு வரப் போவதாக சுவாமி அறிவித்தார். 14 மாத காலத்துக்குள் பழைய மண்கால்வாயின் அழிவுகள் மீது புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதிய வாய்க்கால் அமைக்கப்பட்டது. சுவாமியின் 79 ஆவது பிறந்த தினத்தன்று முதன் முறையாக வாய்க்கால் திறந்து விடப்பட்டது. நான்கு நாட்களின் பின் குடிநீர் சென்னையை வந்தடைந்தது. ஏழு வருடங்களுக்குப் பின் முதன் முறையாக சென்னை வீட்டு நீர்க்குழாய்களில் நீர் வந்தது. இதனால் அசுத்தமான நீரை அதிகவிலை கொடுத்து வாங்கும் தொல்லை தீர்ந்தது.

சுவாமியின் இன்னுமொரு திட்டமான கோதாவரி குடிநீர்த்திட்டம் குறுகிய காலமாகிய 14 மாதங்களுள் கோதாவரி ஆற்றிலிருந்து கோதாவரி மாவட்டத்தின் கிழக்கு மேற்கு கிராமங்களுக்கு தூய குடிநீர் கிடைக்க வழி வகுத்தது. கிழக்கு கோதாவரியில் திட்டப்பணி செய்வது மிகச் சிரமமானது ஏனெனில் இப்பகுதி மலைப்பாங்காக இருப்பதுடன் நெருக்கமான காடுகளையும் கொண்டிருந்தது. அத்துடன் அங்கு பல இனப் பழங்குடிகள் வாழ்வதால் அந்த இடம் புறக்கணிக்கப்பட்ட நிலமாக இருந்து வந்தது. கோதாவரி ஆற்றுநீர் கடலை சென்றடைந்து வீணாகிய போது, அது பாய்ந்து சென்ற கோதாவரி மாவட்டம், நீர் இன்றித் தவித்தது. சுவாமியே முன்னின்று நீர்த்தேக்க கிணறுகள் வெட்டுவித்து வடி கட்டும் நிலையங்களை அமைத்து பாரிய குழாய்த் தொகுதியை இப் பிரதேசத்தில் அமைக்க வழி செய்தார். இத்திட்டம் நிறை வேறியதும். படோடோபங்கள் இன்றி எளிமை யாக திறப்பு விழா கொண்டாடப்பட்டது. பஜனையைத் தொடர்ந்து குழாய்களைத் திறந்து மக்கள் நீரைப் பெற்றனர்.

எனது வாழ்க்கையே நான் தரும் செய்தி என்ற சுவாமி அதே போல சேவை யைப் போதிப்பது மட்டுமல்ல செய்தும் காட்டுகிறார். இதன் பிறகும் தாமதிப்பது தகுமா என்பதைப்போல உலகம் முழுவதிலுமுள்ள சாயி நிறுவனங்கள் இந்தகுடிநீர் சேவை யைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. நம் நாட்டிலும் தம்மாலியன்ற அளவுக்கு சாயி நிறுவனங்கள் பிராந்திய ரீதியாக மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய திட்டங்கள் வகுத்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஸாயியின் அன்பு கங்கையாக எங்கும் பெருகட்டும்.

ஜெய் சாயிராம்

எஸ்.கீதாராணி
திருகோணமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுளின் கொடை ........

☑ பலத்தைத் தருமாறு நான் கடவுளைக் கேட்டேன்!
அவர் கஷ்டங்களைத் தந்து என்னைப் பலப் படுத்தினார்.

☑ ஞானத்தைத் தருமாறு கேட்டேன்!
அவர் பிரச்சினைகளைத் தந்து விடை காணச் செய்தார்.

☑ வளமான வாழ்வைக் கேட்டேன்!
அவர் வலிமையையும், புத்தியையும் தந்தார்.

☑ துணிவைத் தருமாறு கேட்டேன்!
கடவுள் எனக்கு அபாயங்களைத் தந்து அவற்றை வெற்றி கொள்ளச் செய்தார்.

☑ நான் அன்பைத் தருமாறு கேட்டேன்!
கஷ்டங்களுக்குள்ளான மக்களைக் காட்டி அவர்களுக்கு உதவி செய்யச் செய்தார்.

☑ எனக்கு சலுகை செய்யுமாறு கேட்டேன்!
கடவுள் எனக்கு சந்தர்பங்களைத் தந்தார்.

எனக்குத் தேவையான எதையும் பெற்றுக்கொள்ளவில்லை.
ஆனால் அவசியமான எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டேன்.

**" எனது பிரார்த்தனை விடையளிக்கப்பட்டது "**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்




# கருணைக்கடல் சாயியின் அற்புதங்கள்

பகவானுடைய அன்பிற்கும் அருளிற்கும் அளவே கிடயாது. 1994 இல் நாங்கள் சுவாமியைப் பற்றி முதன் முதலில் அறிந்து கொண்டோம். அதிலிருந்து பஜனைக்குச் செல்வதுடன், சுவாமியைப் பற்றிய அற்புதப் புத்தகங்களையும் படிக்க ஆரம்பித்தோம். அந்நேரத்தில் எனக்கு நிரந்தரத் தொழில் ஏதுவும் இல்லை. மேலும் குடும்பத்தில் வறிய நிலை. தீபாவளிக்கு முன்தினம் பொருட்கள் வேண்டுவதற்குப் போதிய பணம்கூட இல்லாத நிலையில் கடனுக்கு வாங்குவதற்கு துவிச்சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு வீதியில் சென்று கொண்டிருக்கும் போது 100 ரூபா தாள்கள் வண்ணாத்துப் பூச்சிபோல் பரந்து விழுவதைக் கண்டேன். பின் துவிச்சக்கர வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டு அவைகளை எடுத்துப் பார்க்கும் போது மொத்தமாக ரூபா 1800.00 இருந்தது. அதனை எடுத்து வந்து சுவாமியின் பாதத்தில் வைத்து இப்பணத்தை தேடி யாரும் வருவார்களா என்று ஒருவாரம் காத்திருந்தேன். அதன் பிறகு இது சுவாமியின் லீலை என்று எண்ணி அந்தப் பணத்திற்கு ஓர் சுவாமியின் பெரிய உருவப் படம் ஒன்றை வாங்கி வந்தேன். அதன் பிறகு சுவாமி மீதான பக்தி நாளுக்கு நாள் அதிகரிக்க ஆரம்பித்தது. அதே சமயம் எனக்கு நிரந்தர தொழில் ஒன்றும் கிடைத்தது,

எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் சுவாமியை நேரே பார்த்து தரிசனம் எடுக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. அதன் பின்னர் நானும் என் மனைவியும் அத்துடன் என் பிள்ளைகள் நால்வருமாக மொத்தமாக 6 பேர் 2004 ஆம் ஆண்டு பெங்களூரில் உள்ள வைட்பீல்டில் சுவாமியின் முதல் தரிசனத்திலே பரமானந்தத்தை அனுபவித்தோம். பின்னர்ஒவ்வொரு வருடமும் சுவாமியின் தரிசனத்திற்காக புட்டபர்த்திக்கு செல்வது வழக்கம்.

அச்சமயம் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எனது வயிற்றில் பித்தப்பையில் கல் இருப்பதாகவும் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் வைத்தியர் கூறியதற்கமைய அம்பாறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கதிர்வீச்சு மூலமாக சத்திர சிகிச்சையை மேற்கொண்டதன் காரணமாக அதன் பாதிப்பு பித்தப்பையை தாக்கி விட்டது. இதனால் பித்தம் கலங்கி இரத்தத்துடன் சேர்ந்து உடல் முழுவதும் பரவி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தம் அனைத்தும் பச்சை நிறமாக மாறி இதனை இனங்காண முடியாமல் 1 வார காலமாக நான் பாரிய இன்னல்களுக்குள்ளானேன். மீண்டும் ஓர் சத்திர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அதில் எனது பித்தப்பை முற்றாக நீக்கப்பட்டது. அதனால் அறுவைச் சிகிச்சை செய்த துவாரத்தினடாக இரத்தக்கசிவு நிற்காமல் வர ஆரம்பித்தது. 12 நாட்கள் தொடர்ந்து அறுவைச்சிகிச்சை பிரிவில் இருந்தேன். அதன் பிறகும் 1 மாத காலமாக இரத்தச் கசிவு நீடித்தது. அதன் பிறகு இடம் பெற்ற பரிசோதனையில்தான் தெரிய வந்தது எனது பித்தப்பையை நீக்கும் போது தவ-றுதலாக ஈரலில் சிதைவு ஏற்பட்டிருந்தது, மீண்டும் ஒரு சத்திர சிகிச்சைக்காக கொழும்பில் தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். அங்கு எனக்கு அறுவை சிகிச்சையை ஆரம்பிக்க உள்ள தறுவாயில் அவ் வைத்தியசாலையில் உள்ள அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் இயந்திரம் பழுதடைந்து விட்டது என்று வைத்தியர்கள் கூறிவிட்டனர். வைத்தியர்களால் கைவிடப்பட்ட நிலை-லயில் மரணப் படுக்கையில் நாங்கள் மிகுந்த கவலையுடன் எங்கள் மனதை சாந்தியடையச் செய்துவிட்டு எனது மனைவி தனது பையில் இருந்த "சாயி பாபா அற்புத புருஷர்" என்ற புத்தகத்தை எடுத்துப் படித்துக் கொண்டிருக்கும் போது புத்தகத்தில் 117 ஆம் பக்கத்தில் எனது நிலையில் அதே வருத்தத்துடன் இருந்த சாயி சகோதரர் ஒருவர் இறுதிக் கட்டத்தில் சுவாமியின் வீபூதியை நீரில் கரைத்து பருகியதால் அந்த இரத்தக்கசிவு நின்றிருப்பதாக அப்புத்தகத்தில் எழுதி இருந்தார். அதே சமயம் எனது மனைவியின் தாயாரின் வீட்டில் அன்றைய தினத்திற்கு முந்திய தினம் சுவாமியின் படத்தில் வீபூதி கொட்டியது. அதே அற்புத வீபூதியை என் மனைவி பையில் வைத்திருந்தாள் உடனே அந்த வீபூதியை நான் 3 நாட்கள் நீரில் கரைத்துப் பருகி வந்தேன். என்ன ஆச்சரியம். 2 மாதகால மாக நிற்காமல் கசிந்து கொண்டிருந்த இரத்தக் கசிவு குறைய ஆரம்பித்து முற்றாக நின்று விட்டது. அதன் பின் சத்திர சிகிச்சைக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு பரிசோதனை நடத்திப் பார்க்கும் பொழுது சத்திரசிகிச்சைக்கான எந்தவித அவசியமும் இல்லை என்று வைத்திய நிபுணர் கூறி வியப்படைந்தார். அதன் பின் தான் தெரிந்தது. எனக்கு உயிர் கொடுத்தது சுவாமி என்று. மீண்டும் இருவாரங்கள் கழித்து அதே " சாயிபாபா அற்புத புருஷர் " என்ற புத்தகத்தில் 117 ஆம் பக்கத்தில் இருந்த அதே வீபூதியின் கதை மாயமாய் மறைந்து விட்டதை உணர்ந்து கொண்டோம்.

ஜெய் சாயிராம்

திரு.கா.கனகலிங்கம்
வளத்தாப்பிட்டி

**தண்ணீர் மேல் மிதக்கின்ற படகில் பிரயாணம் செய். படகினுள் தண்ணீர்வர அனுமதிக்காதே.**

**- பாபா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்




# ஸ்ரீமத் பாகவத வாஹினி :
# ஸ்ரீ கிருஷ்ணன் பரம பதம் அடைதல்

மகாபாரதப் போர் முடிவடைந்து விட்டது பாண்டவர்கள் ஹஸ்தினா புரத்திலிருந்து அரசாண்டார்கள். தர்மராஜா, காந்தாரி, திருதராஷ்டிரர், விதுரர் என்போர் மறைந்துவிட்ட துன்பத்திலிருந்தாலும் இன்னும் ஏதோஒரு பெரிய வேதனையிலிருப்பதை முகத்தில் கண்ட தம்பிமார். வினாவினார்கள்.

***தர்மர்:***

"என்னைச் சுற்றி தீய சகுனங்களே தென்படுகின்றன. அறத்திற்கு மாறாக பல சம்பவங்கள் நடக்கின்றனவே."


- ☑ நீதி மன்றங்களில் தவறுகள் அநீதிகள் நிகழ்வதைப் பற்றி விண்ணப்பங்கள் வருகின்றன.
- ☑ சுற்றி வரும் பொழுது தாய்ப்பசு உடன் ஈன்ற கன்றுக்குப் பால் கொடுக்க மறுக்கின்றது.
- ☑ பஜாரில் சில பெண்கள் கட்டுப்பாடின்றி இங்கும் அங்கும் அலையக் கண்டேன். என்னைக் கண்டும் நடத்தையை மாற்றவில்லை.
- ☑ பிராமணர் ஒருவர் பாலும் தயிரும் விற்கக் கண்டேன்.
- ☑ மக்கள் வீட்டுக் கதவுகளை இறுக்கப் பூட்டுகிறார்கள்.
- ☑ சந்தியா வந்தனம் செய்வதற்காக நெருப்பை மூட்ட எவ்வளவோ முயன்றேன் முடிய வில்லை.
- ☑ நீதிமன்றில் மனைவி கணவனை விட்டுப் போக விவாகரத்துக் கோரும் விண்ணப்பம் வந்துள்ளது.
- ☑ அரச குதிரைக் கொட்டகையில் குதிரைகள் தாரை தாரையாக கண்ணீர் வடிக்கின்றன.
- ☑ போர் மீண்டும் வருமோ? எனக்கு உயிராபத்து வருமோ? இல்லை இல்லை கலியுகம் தொடங்கி விட்டது. போல் தெரிகிறது.
- ☑ அர்ஜுனன் துவாரகை சென்று 7 மாதங்களாகியும் ஒரு செய்தியும் வரவில்லையே. என் கவலை எல்லாம் பகவானைப் பற்றித்தான். அவர் உலகைவிட்டு விடுவாரோ என்ற பீதிதான் என்னை மிகவும் வாட்டுகிறது.

***பீமன்:***

பேதலித்த மனம் தேவையில்லாத பயத்தையும் பீதியையும் உண்டா க்க வல்லது.

***தர்மர்:***

ஏதோ பெரிய விபரீதம் நடந்து விட்டது எனது இடது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோள் துடிப்பதைப் பார். உடலோ வலிமையை இழக்கிறது. பஞ்ச பூதங்கள் ஓலங்கள் எழுப்புகின்றன. சில நாட்களுக்கு முன்பு சில பகுதிகளில் இரத்த மழையும் பெய்ததாகத் தகவல் வந்துள்ளது.

இதனைக் கேட்டதும் எல்லோருக்கும் மனம் சலித்து விட்டது. பீமன் அர்ஜுனனைத் தேடப் போக ஆயத்தமானான். அப்பொழுது அர்ஜுனன் வந்தான். சோகமயமாகக் காட்சி அளித்தான். தர்மராஜாவின் காலில் விழுந்து உருண்டு புரண்டான்.

என்ன நடந்தது? கூறு என்கிறார் தர்மர் அர்ஜுனனால் கதைக்க முடியவில்லை. கடைசியாக "வாசுதேவன் நம்முடன் இல்லை" நாம் அனாதைகளாகி விட்டோம் என்கிறான்.

***தர்மர்:***

மற்றவர்களைப் பற்றிச் சொல் லாதவர்கள் பற்றிச் சொல்.

***அர்ஜுனன்:***

அவர்கள் பகவான் பிரியமுன்னரே பிரிந்து போய் விட்டார்கள்.

***தர்மர்:***

என்ன ஒன்றும் விளங்கவில்லை?

***அர்ஜுனன்:***

வாசுதேவனின் சித்தமில்லாமல் எந்த ஒரு மிகச் சிறிய காரியமானாலும் நடைபெற முடியாது.

பகவான் ஒரு சூத்திரதாரி. பொம்மலாட்டக் காரன். நாம் பொம்மைகள். ஆனால் ஒன்றும் தெரியாதது போல் நடிப்பார். பார்ப்பவரின் மனதில் வெவ்வேறு தோற்றங்களையும், உணர்ச்சிகளையும் அந்நாடகம் ஏற்படுத்தும். யாதவர்கள் ஆன்மீகத்தில் சிறந்தவர்கள். 7 நாட்களில் மகா பெரும் யாகத்தைச் செய்து முடித்திருந்தார்கள். இறுதிப் படையல்கள் பகவான் முன்னிலையிலேயே போடப்பட்டது. எல்லோரும் மகிழ்ந்தார்கள். நண்பகல் நெருங்கியது. உணவு பரிமாறப்பட்டது. யாதவர்களில் சிலர் அளவுக்கு மீறிக் குடித்த படியால் கலகம் நிகழ்ந்தது. கொடூரமான கலகம், தகப்பன் பிள்ளையைக் கொல்வதும் சகோதரர்கள் ஒருவரை ஒருவர் கொல்வதும் கடைசியில் எல்லோருமே மாண்டு முடிந்தனர்.

நன்மக்களாகிய யாதவர்களுக்கே கிருஸ்ணபகவான் முன்னிலையிலே இம் முடிவு ஏற்பட்டது. உலக அழிவின் அறிகுறியே என்று தர்மராஜன் சொன்னார்.

***தர்மர்:***

ஏன் கிருஸ்ண பகவான் கலகத்தை நிறுத்தவில்லை?

***அர்ஜுனன்:***

யாதவர் குலத்தின் முடிவும். நமது குலத்தின் முடிவும் ஒன்று தானே. பகவான் முன்னிலையில்தானே மகாபாரதப் போரும் நடந்தது. 40 இலட்சம் மக்கள் போரில் மாண்டார்களே. பகவான் நிறுத்தியிருக்கலாமே. எல்லாம் அவர் சித்தப்படியே நடந்தது.

***தர்மர்:***

பாரதப் போருக்கு காரணங்கள் இருந்தன. செல்வம் அரசுரிமை, பெண் எல்லாக் காரணங்களும் இருந்தன. அதர்மத்தை அழிக்க வேண்டியிருந்தது. யாதவர்களுக்கோ ஒரு குறைவுமில்லையே.

வெளித் தோற்றத்தையே நாம் அறிகிறோம். சூழ்நிலைகள், நிகழ்ச்சிகள், உணர்வுகள் எல்லாம் இறைவனின் சித்தம்:

பிறப்பு ஏற்பட்டது. ஏன் என்று சிந்திக்கிறோமா? இல்லையே. ஏன் இறப்பு ஏற்பட்டதென்று தெரிந்து கொள்ள எவ்வளவு முயற்சிக்கிறோம்.

பிறப்பும் இறப்பும் இரு மலை உச்சிகள். நடுவிலே வாழ்க்கை என்னும் நதி ஓடுகிறது. ஆத்ம சக்தி பாலமாக அமைகிறது. அவன் ஆடும் நாடகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்மம் நமக்கும் புலப்படாது. புரிந்து கொள்ளத் தவறிவிட்டோம். நமக்கு அவன் அருள் எப்பொழுதும் இருந்ததினால் கா்வத்தில் இருந்து விட்டோம். ஆனால் அந்தப் பேரின்பத்தை அனுபவிக்க முயற்சிக்கவில்லை.

இறைவனின் கைப் பொம்மைகள் தான் நாம் என்பதை மறந்து விடுகிறோம். இதை நிரூபிக்க நான் திரும்பி வரும் வேளையில் ஏற்பட்ட துயர அனுபவத்தைக் கூறுகிறேன்.

கிருஸ்ண பகவான் இவ்வுலகிலிருந்து நீங்குமுன், துவாரகையிலிருந்தும் அவர் அருகில் இருக்கும் பாக்கியம் இல்லை. அவர் போகுமுன்பே எனக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

“இது என் கட்டளை. இதை நிறைவேற்று 7 நாட்களினுள் துவாரகை கடலில் மூழ்கி விடும். நீ அரசியர்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவரையும் இந்திர பிரஸ்த நகருக்கு அழைத்துச் செல்”

அவசர அவசரமாகக் கூட்டக் கூடியவர்களைக் கூட்டிப் புறப்பட்டோம். வழியில் நதியொன்று பெருக்கெடுத்த படியால் இரவு காட்டில் தங்கினோம். கும்மிருட்டில் காட்டு வாசிகள் ஆயுதம் கொண்டு எங்களைத் தாக்கினார்கள். பெண்களை இழுத்துக் கொண்டு சென்றார்கள். ஆபரணங்களைச் சூறையாடினார்கள்.

எனது வீரத்தைப் பறைசாற்றி, பாணத்தைத் தொடுத்தேன். ஆனால் மந்திரங்கள் ஒன்றுமே ஞாபகத்திற்கு வரவில்லை. எனது வலிமையெல்லாம் போய் விட்டது. பெண்கள் அலறிய சத்தத்தைக் கேட்டுக் கொண்டிருந்தேன். கிருஸ்ணா ஏன் எங்களை மறுபடியும் துன்பத்தில் போட்டுக் கொண்டாய்? எம்மால் இனி உயிர் வாழ முடியுமா?

***சகாதேவன்:***

கலியுகம் ஆரம்பித்து விட்டது. கிருஸ்ண பகவான் உலகத்தை விட்டுச் சென்ற அன்றே துவாபரயுகத்தின் கதவுகள் மூடப்பட்டன.

நாமும் கிருஸ்ணனிடம் போய்ச் சேர வேண்டும். அதற்குரிய நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

குந்தி தேவி உடனேயே உயிர் நீத்தாள். பரீட்சித்திற்கு பட்டாபிஷேகம் செய்தார்கள். செல்கிறோம் என்று சொல்லி அணிந்திருந்த ஆடைகளுடன் வெளி நடந்தனர். வடக்கே நோக்கி செல்லும் மகாபிரஸ்தானம் சபதத்தை மேற்கொண்டனர்.

**எமது துயரத்தைப் பற்றி பகவான் 2005 ஆம் ஆண்டு என்ன சொன்னார்?**

அன்பின் சொரூபிகளே ஸ்ரீலங்காவிலிருந்து என்மேலுள்ள அன்பினால் வந்துள்ளீர்கள். என் அன்போ உங்களின் அன்பை விட 100 மடங்கு கூடியது. இராவணன் காலத்திலிருந்து பல கஷ்டங்களை அனுபவிக்கிறது இலங்கை. ஆனால் இனிமேல் ஒரு தீங்கும் வராது. உங்களின் இதயம் தூய்மையானது. கஷ்டங்கள் கார் மேகம் போல் கலைந்து விடும். கடவுள் உங்களைக் காப்பாற்றுவார்.

விரைவில் ஸ்ரீலங்காவிற்கு வருவேன். தற்போது நடப்பது கஷ்டமாயுள்ளது. அக்கஷ்டம் இந்த உடம்பிற்கு மட்டுமே. நான் எப்படியும் விரைவில் உங்கள் நாட்டிற்கு வருவேன். சிறுபிள்ளை முதல் முதியோர் வரை சுவாமி மீது பூண்டுள்ள அன்பை யான் அறிவேன். இந்த உறவு நிலையானது.

(23.05.2005 புத்த பூர்ணிமா அருளுரையின் போது பகவான் பாபா கூறியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்தி என்பது பலவகையில் வெளிப்படுகிறது.

1. கடவுளின் பெருமைகள் அவர் குணங்களைப் பற்றிய வருணணைகள் மேல் வைக்கும் அன்பு.
2. அவரின் மனமயக்கும் அழகின் மேல் அன்பு.
3. அவரைப் பூஜை செய்து வழிபடுவதன் மேல் அன்பு.
4. அவரை இடைவிடாது நினைத்துக் கொண்டிருப்பதன் மேல் அன்பு.
5. இறைவனின் சேவை செய்வதில் அன்பு.
6. இறைவனை தன் சகாவாக தோழனனாக நினைக்கும் அன்பு.
7. தன் மகனாக கடவுளை நினைத்துப் பாராட்டும் அன்பு.
8. மனைவி தன் கணவன் மேல் வைக்கும் அன்னியோன்னியமான அன்புக்கு நிகராக இறைவன் மேல் வைக்கும் அன்பு.
9. தன்னை முழுமையாக சரணாகதி செய்யத் துடிக்கும் அன்பு.
10. அவனுள் இரண்டறக் கலந்துவிடத் தயாராக இருக்கும் ஆர்வம் கலந்த அன்பு.
11. அவனை விட்டுப் பிரிந்து விட்டு, பிரிவைத் தாங்காமல் துன்பத்தை அனுபவிக்கும் ஏக்கம் கலந்த அன்பு.

- பாபா -

ச.சா. 1994 மார்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்




# எல்லாம் இன்ப மயம்

காலம் முன்நோக்கி ஓடுகின்றது. நாமும் காலத்தோடு ஓடிக்கொண்டிருக்கிறோம். மனி தன் மனிதனாக கூட வாழ முற்படவில்லை. ஆசா பாசங்களில் சிக்கி கால ஓட்டத்தின் மத்தியில் சிக்கித் தவிக்கின்றான். நல்ல வாழ்க்கை முறைக்குத் தேவை யான சத்தியமும் கட்டுப்பாடும் மிகவும் அரிதாகி விட்டன. நமது நடத்தையின் ஆதாரமாக இருக்க வேண்டிய பக்தியும், தன்னம்பிக்கையும் மாயமாகி வருகின்றன. அது மட்டுமல்ல பொறுப்பற்ற ஆசைகள் பெருமளவு பெருகியுள்ளன. தன்னடக்கம் நமது வாழ்க்கையின் முக்கிய அம்சமாகும். சத்தியத்திடம் மதிப்பும் மரியாதையும் நாம் வளர்த்துக் கொள்வதில் அக்கறை செலுத்த வேண்டும். நமது கலாசாரத்தில் பெற்றோரிடம் பக்தியுடன் இருத்தல் உயிரிலும் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது.

ஆனால் இன்று மேலை நாட்டவரின் ஒழுக்க முறைக ளையும், சம்பிரதாயங்களையும், மணப்பான்மையையும் பின்பற்று கின்றனர். வெளித் தோற்றத்திலும் வெளிப்பகட்டிலுமே மூழ்கியுள்ளனர். ஒரு யானைக்குத் தன் பலம் தெரியாது. அதைப் போல நமது பாரம்பரிய சம்பிரதாயங்களின் வலிமையை அறியாமல் இருக் கின்றோம்.

இந்த உலகில் எந்த ஒரு பொருளும் காரணமில்லாமல் படைக்கப்படவில்லை. அப்படியி ருக்க மனிதன் மட்டும் தன் வாழ்வைப் பயனற்றதாகச் செய்வது விந்தைதான். எல்லா மதங்களும் சாதிகளும் மனித னால் உண்டாக்கப்பட்டவையே. பிரிவினைகளுக்கும், வேற்றுமை களுக்கும் மனிதனே காரணம். இவைகளை மனிதன் ஏற்படுத்தும் போது ஒன்றை மறந்து விடுகின்றான். அதுவே மனிதனின் முதல் தேவையான ஆனந்தம். இறை வனின் பொக்கிஷத்தில் உள்ள முக்கிய சொத்துக்கள் சந்தோஷம், சத்தியம், தியாகம் ஆகும். ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையே நிலவ வேண்டிய உறவு முறையை மனிதன் உணர்ந்து கொண்டால் மனிதன் சந்தோஷமாக வாழலாம். சந்தோஷம் என்றால் துக்கம் இல்லாமல் இருப்பதே சந்தோஷம் என்று பதில் வரும். எனவே துக்கம் அல்லது துன்பத்தை இல்லாமல் செய்து சந்தோஷ த்தை எப்படி அனுபவிப்பது என்று யோசிக்க வேண்டும். அந்த சந்தோஷத்தை அனுபவிக்கு முன் மனிதன் தான் உபயோகிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வார்த்தைகளின் உள்ளார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். தன்னை நேசிக்கும் மனிதன் அவன் செய்யும் எல்லா முயற்சிகளிலும் மற்றவர்களையும் நேசிக்க வேண்டும். மற்றவர்களிடம் அன்பை வளர்த்தால் தான் தன்னை தானே நேசிக்க ஒருவனால் முடியும். மற்றவர்களுக்கு அளிக்கும் மகிழ்ச்சியே தனக்கு சந்தோஷத்தை அளிக்கும்.

தன்னைச் சூழ்ந்துள்ள மனித சமுதாயத்துடன் தன்னிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்ளாவிடில், எதையுமே பெற முடியாது. எனவே மனிதன் உணர வேண்டியது என்ன வென்றால் தன்னைச் சூழ்ந்துள்ளவர்களின் சந்தோஷம் தான். தன் சந்தோஷத்திற்கு வழியாகும் என்பதே. மனிதன் உணர வேண்டியது, மரணம் வாழ்வில் உள்ளடங்கியுள்ளது. துன்பம் இன்பத்தின் உள்ளார்த்தமாக உள்ளது. இன்பம், துன்பம், பகல், இரவு இவைகளை நாம் வெவ்வேறாக எண்ணுகின்றோம். சிந்தித்துப் பார்த்தால் அவை இரண்டும் ஒன்றே. எல்லா நேரங்களிலும் இந்த உண்மையை மனிதன் உணர நல்ல காரியங்களில் மனிதன் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். நல்லவர்களின் சேர்க்கையிலேயே இருக்க வேண்டும். பெரியோர்களின் நன்மொழிகளை அறிவுரைகளைக் கேட்க வேண்டும். தன்னை வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும். ஆனால் இன்று மனிதன் பெரியோர்களின் முன்னிலையில் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதும் அவனுக்கு தெரிவதில்லை. பல இளைஞர்களுக்கு எவ்வித ஆடைகளை எப்பொழுது அணிய வேண்டும் என்பது கூடத் தெரியவில்லை. அடிப்படையான விஷயங்களில் கூட அறிவு குறைந்தவர்களை எப்படி படித்தவர்கள் என்று கூற முடியும். தமது பெற்றோர்களை ஆசிரியர்களை, பெரியோர்களை மதித்து நடந்தால் எதர்காலத்தில் மற்றவர்களால் மதிக்கப்படுவார்கள். இல்லை என்றால் யாரும் அவர்களை மதிக்க மாட்டார்கள். ஒருவன் மற்றவர்களுக்கு சந்தோஷம் அளிக்க வேண்டும் அதன் பிறகு மற்றவர்களிடம் இருந்து சந்தோஷம் பெறுவதை எதிர்பார்க்கலாம்.

ஒரு தனிமனிதனும், சமுதாயமும் இணைந்ததே உலகம் என்பதை மனிதன் உணர வேண்டும். மனிதனின் சுகம், சந்தோஷம் என்பது சமுதாயத்தின் சுகம், சந்தோஷத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டது. ஒருவன் சந்தோஷமாக இருக்க விரும்பினால் சமுதாயமும், உலகமும் சந்தோஷமாக இருத்தல் அவசியம் என்பதை உணர வேண்டும்.

எல்லா மதங்களும் உள்ளத் தூய்மையையும், தன்னைத் தானே அறிந்து கொள்ளும் விதத்தையும் போதிக்கின்றன. மனிதன் ஜாதி, மத வேறுபாடுகளைப் பொருட்படுத்தக் கூடாது. எல்லா மதங்களும் ஒரே குறிக்கோள் கொண்டவை. இந்த அடிபபடைக் குறிக்கோளையும் அவைகளின் முக்கிய அம்சங்களில் உள்ள ஒற்றுமையையும் காண முயல வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன் நம்பிக்கையை வளர்த்து அதனால் வரும் ஆனந்தத்தை அனுபவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மற்றவர்களின் நலனுக்காகத் தியாகம் புரியக்கூடிய மனப்பான்மை பெற வேண்டும். இவை எல்லாம் மனிதனின் இன்பத்தை அடைய எமது இதய தெய்வம் அருளிய அறிவுரைகள். இந்த இனிய வார்த்தைகளை எதிர்கால வாழ்க்கையில் நடைமுறைக்குக் கொண்டு வந்தால் எல்லாம் இன்பமயமே!

ஜெய் சாயிராம்

ஸ்ரீமதி.வ.செல்வநாயகம்
கல்முனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை உணவு. . .

பறவைகளும் மிருகங்களும் மனிதனைப் போல் இதயநோயாலோ, அஜீரணத்தாலோ வருந்துவதில்லை. காரணம். அவை உண்ணும் இயற்கை உணவு. மனிதனைப் போல் வறுத்த, பொரித்த எல்லாவித உணவையும் நாவின் ருசிக்கு அடிமையாகி அவை உண்பதில்லை. நாகரீகமான இந்நாளைய மனிதன் பலவகையான செயற்கை உணவுகளையும், பலவிதமான மதுவகைகளையும் கொண்டு தன் வாழ்வை தானே நாசமாக்கிக் கொள்கிறான். பறவைகளும், மிருகங்களும் இயற்கையாக வாழ்கின்றன. ஆனால் செயற்கை வாழ்க்கை முறைகள் மனிதனின் வாழ்க்கையை, அவன் உடல் நலத்தை மிகவும் பாதிக்கின்றன. மனிதன் நோய்களினின்றும் பாதுகாக்கப்பட வேண்டுமானால் முதலில் அவன் உணவில் கட்டுப்பாடு வேண்டும். இறைவன் படைப்பில் உள்ள அத்தனையிலும் மனிதனுக்குத் தான் பகுத்துணரும் சக்தி அளிக்கப்பட்டுள்ளது. இதுதான் அவனை விலங்கிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இந்த பகுத்தறியும் உணர்வை மனிதன் தன் உணவுப் பழக்கங்களில் உபயோகிக்க வேண்டும்.

- பாபா -

ச.சா 1994 டிசம்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# கடமை முதலில் தன்னலம் கடைசியில்





1968 ஆம் ஆண்டு வீசிய புயல்காற்று ஒரிசாவிலுள்ள ஏழை மக்களின் முகத்தில் இரக்கமற்ற அடியாக வீழ்ந்தது. புயல்க்காற்றும் சோனாவாரி மழையும் இயல்பு வாழ்க்கையை மட்டும் குழப்பவில்லை. கடற்கரையோரப் பகுதியை முற்றாக அழித்து விட்டது. அநேக வீடற்றவர்களையும், அநாதைகளையும் தான் விட்டுச் சென்றது. இரக்கமற்ற இயற்கைப் பேரழிவினால் தங்கள் உடமைகள், கால்நடைகள், வீடுகள் எல்லா வற்றையும் இழந்து உதவியற்றவர்களாக ஓயாத மழையினூடே உயிரைக் காப்பாற்ற வேண்டி கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

எல்லாவித தகவல் சாதனங் களும் தொடர்புகள் அற்ற நிலையில் இருந்தது. கீழே மக்கள் ஏதாவது உதவி கிடைக்குமா என்ற ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். மேலே, ஆகாயத்திலிருந்து அரச அதிகாரி கள் பேரழிவைப் படமெடுத்து மதிப்பீடு செய்து கொண்டிருந்தனர். சமூக சேவையாளர்கள் பாதிக் கப்பட்டவர்களை அடைய முயற்சி எடுத்தனர். ஆனால் தொடர்மழை யாலும், காற்றாலும் அது கைகூடவில்லை. ஸ்ரீ சத்திய சாயி சேவா அமை ப்பின் சேவையாளர்களும் பாதிக்கப்பட்டவர்களை அடைந்து உதவி செய்ய தம்மால் இயன்றவரை முயற்சி செய்தனர்.

அப்படிப்பட்ட தொண்டர்கள் குழு ஒன்று பாதிக்கப்பட்ட ஒரு கிராமத்தின் எல்லைகளை வந்து அடைந்தது. தம்முடன் உணவுப் பொதிகள், மருந்துகள், உடுப்புகள், படுக்கை விரிப்புக்கள் ஆகியவற்றை எடுத்து வந்திருந்தனர். கிராமத்தை அடையும் போது எல்லா இடமும் நீரில் மூழ்கிவிட்டது. மழை தூறிய படியே இருந்தது. யாராவது வந்து அவசியம் தேவையுள்ள மக்கள் எங்கு ஒதுங்கியுள்ளனர் என்று வழி காட்டுவார்களா என்று கிராமத்தின் நுழைவாயிலில் தொண்டர் குழு காத்திருந்தது.

கடைசியாக சில கிராம த்தவர்கள் இவர்களைக் கண்டு ஓடிவந்தனர். அதிகம் உதவி தேவைப்படும் இடங்களை இவர்கள் காட்டுவார்கள் என்று தொண்டர்கள் குழு நம்பியது. ஆனால் ஓடிவந்த கிராமத்தவர்கள் அத்தியாவசியப் பொருட்களை பறிப்பதிலும், எடுப்ப திலும் ஈடுபட்டனர். தொண்டர்களுக்கு யாரை சமாளிப்பது என்று தெரி யவில்லை. அவர்களும் முழுவது ஈரத்தில் நனைந்து களைப்படைந்து விட்டனர்.



அப்போது அந்தக் கிராமத்த வர்கள் கூட்டத்திலிருந்து ஒரு இளம்பெண் முன் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தவர்களை அமைதிப்படுத்தினாள். அவர்கள் அமைதியாகவும், கட்டுப்பாடாகவும் இருந்து தொண்டர்கள் தங்கள் உதவிகளைச் செய்ய அனுமதிக்க வேண்டியதன் அவசியத்தை இனிமையாகவும் அன்பாகவும் கூறினாள். உதவி அவசரம் தேவைப்பட்டவர்களை அடையச் செய்வதில் தொண்டர்களுக்கு உதவி செய்தாள். இதனால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி, மருந்துகள், உணவு என்பவற்றை வழங்கக் கூடியதாக இருந்தது.

கிராமத்தவர்கள் சிலர் அமைதி குலைந்து காணப்பட்ட வேளைகளில் அன்பான வார்த்தைகள் கூறினாள். அத்துடன் உணவுப் பொதிகள், மருந்துகள் வழங்குவதிலும் தொண்டர்களுக்கு உதவி செய்தாள். நாள் முழுவதும் அவள் அந்தக் குழுவினருடன் வெள்ளமும், சேறும் சகதியும் உள்ள தெருக்கள் வழியாக மூலை முடுக்கெல்லாம் கூட்டிச் சென்று உதவி தேவைப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதற்கு வழிகாட்டினாள். அவள் களைப்படைந்ததாகத் தெரியவில்லை. அவளது முகம் எப்போதும் நன்றியறிதல், அன்பு ஆகியவற்றை பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

குழுவினர் தங்கள் வேலைகளை முடித்து விட்டு ஓரிடத்தில் இருந்து இளைப்பாறினார்கள். அப்பொழுது குழுவின் உறுப்பினர் ஒருவர் இவ்வளவு நேரமும் எங்களுக்கு வழிகாட்டி, உணவு, மருந்து ஆகியவற்றை அவசியம் தேவைப்பட்டோருக்கு வழங்குவதில் உதவி செய்த அந்தப் பெண் தனக்கென்று எதுவும் பெற்றுக் கொள்ளவில்லையே என்பதை ஞாபகப்படுத்தினார். இதை அவர்களில் ஒருவர் அப் பெண்ணிடம் "நீங்கள் ஏன் உங்களுக்காக எந்தப் பொருளையும் பெற்றுக் கொள்ளவில்லையே?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண் "மற்றையவர்களுக்கு உதவுவதுதான் முக்கிய கடமையாக இருக்க வேண்டும். கடமை முடிந்ததும் நானே உங்கள் தேவைகளை கவனித்துக் கொள்வேன்" என்று எங்கள் குரு கூறியுள்ளார். என்று பதிலளித்தாள். ஒரு இளம் பெண் ஏழ்மை நிலையில் இருந்து கொண்டு உயர்ந்த படிப்பினையுடைய இம்மொழிகளை தெரிவித்தது. அவள் தனது குருவில் எவ்வளவு மதிப்பும் நம்பிக்கையும் வைத்துள்ளாள் என்பதை அறிந்து அக் குழுவினர் மகிழ்ச்சியடைந்தனர். அவர்கள் அவளது குருவைப் பற்றி விசாரித்ததுடன் எப்படி அவரைச் சந்தித்ததாகவும் வினாவினார்.

அந்தப் பெண் கூறினாள் "நான் எனது குருவைப் பார்த்ததில்லை. ஆனால் எனது ஆசிரியை தந்த அவரது படம் என்னிடம் உள்ளது. எனது ஆசிரியையும் பக்கத்திலுள்ள பட்டணத்தில் தான் இருக்கிறார்" என்று கூறினாள். மிகவும் ஆவலுடன் அந்த தொண்டர்கள் அவளது குருவின் பெயர் என்ன என்று கேட்டனர். "ஸ்ரீ சத்திய சாயி பாபா" என்று அந்தப் பெண் பதிலளித்தாள். அத்துடன் "நான் ஒரு பால விகாஷ் மாணவி" என்று நன்றியும் பெருமையும் கலந்த குரலில் கூறினாள். இதனைக் கேட்ட சத்திய சாய நிறுவனத் தொண்டர்கள் கண்ணீர் மல்கி ஊமையானார்கள். பிரபஞ்ச குருவினால் செதுக்கப்பட்ட தன்னலமற்ற ஒரு தெய்வச் சிலையை தம்முன் கண்டனர். இது உலகில் "சாயி அன்பு" என்ற பொற்காலம் மலர்ந்து வருவதை உணர்த்துவதாக உள்ளது. சுவாமி எப்போதும் எமக்கு ஞாபகமூட்டுகிறார்". இந்த உலகில் அன்பை விட உயர்ந்தது எதுவும் இல்லை. உயர்ந்த ஆன்மீக செயற்பாடானது. அன்பை சேவையாக மாற்றுவதுதான்" என்பது தான்.

*(ரேடியோ சாயியில் இருந்து தமிழாக்கம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# நிறுவனச் செய்திகள்

**சாயியை நோக்கிய பயணம் - இளைஞர் பிரிவினரின் தீவிர சாதனை நிகழ்வுகள்**

2010 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் அக்டோபர் மாதம் 5 ஆம் திகதி வரை இலங்கையிலிருந்து வரும் பக்தர்களுக்கு விசேடமாக இளைஞர்களுக்கு பகவானின் தரிசனத்திற்கு முன்வரிசை இடம் ஒதுக்கப்படவேண்டும் என்ற இலங்கையின் வேண்டுகோள் ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து கடந்த வருடம் செப்டம்பர் மாதம் முதல் இளைஞர் பிரிவினர் தீவிரமான சாதனையில் ஈடுபட்டுள்ளனர். தனிப்பட்ட ரீதியிலும், நிலைய ரீதியிலும், பிராந்திய ரீதியிலும், தேசிய ரீதியிலும் பல சாதனை நிகழ்வுகள் ஒழுங்கு படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறன. 2007 ஆம் ஆண்டு அகில உலக இளைஞர் மகாநாட்டிற்காக வழங்கப்பட்ட இளைஞர்களுக்கான 9 ஒழுக்க நெறிக் கோவையை அடிப்படையாகக் கொண்டு இச் சாதனை நிகழ்வுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தேசிய ரீதியான மகாநாடு ஜூன் 18, 19, 20 ஆகிய திகதிகளில் பண்டாரகம என்ற இடத்தில் அமைந்துள்ள சர்வோதய கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. 3 தினங்களும் நாட்டின் சகல பாகங்களிலுமிருந்து வருகை தரும் இளைஞர்கள் ஒன்று கூடி தமது ஆன்மீக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சாயியை நோக்கிய பயணத்திற்கு இது ஒரு ஆயத்த நிகழ்வாக அமையும். உலக இளைஞர் அமைப்பின் இணைப்பாளர் சகோ. சித்துசுதாசமா அவர்கள் அதிதியாக கலந்து கொள்ள புட்டபர்த்தியிலிருந்து வருகை தரவுள்ளார். சுவாமியின் முன்னிலையில் நடாத்தக் கூடிய வாய்ப்புக்கள் தரப்பட்டால் நாடகம், இசை நிகழ்ச்சி, குழுப்பாடல் நிகழ்ச்சி என்பன பயிற்றுவிக்கப்பட்டு ஆயத்தமாக செல்லவுள்ளனர். இவர்களுடன் மானிப்பாய் சத்திய சாயி மனித மேம்பாட்டு பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களும் இக் குழுவில் இணைந்து கொள்ளவுள்ளனர்.

**சத்திய சாயி பாடசாலை வருடாந்த பண்பு விருத்தி விளையாட்டு விழா**

மானிப்பாயில் அமைந்துள்ள சத்திய சாயி பாடசாலையின் 2010 ஆம் ஆண்டுக்கான பண்பு விருத்தி வியளையாட்டு விழா 27.2.2010 மாலை 2.45 மணிக்கு பாடசாலை அதிபர் ஸ்ரீமதி.ப.பத்மநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவிற்கு சத்திய சாயி நம்பிக்கை நிதியத்தின் மத்தியகுழுச் செயலாளர் சட்டத்தரணி ஸ்ரீ திஸ்ஸ டபிள்யு கருணாரட்ண அவர்கள் பிரதம விருந்தினராகவும், சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.சி.கந்தசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலநது கொண்டனர். மனித மேம்பாடுகளை வெளிப்படுத்தும் விதமாக மாணவர்களின் நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன. போட்டிகள் தவிர்க்கப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும். மாணவர்கள் அனைவருக்குமான பரிசில்களை ஸ்ரீமதி ருக்மணி கருணாரட்ண அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

**மத்திய வலயமும் வவுனியா சாயி நிலையமும் இணைந்து நடத்திய கண்சிகிச்சை முகாம்**

பகவானின் 84 ஆவது அவதார தினத்தையொட்டி மத்திய வலயமும், வவுனியா சாயி நிலையமும் இணைந்து கடந்த வருடம் நவம்பர் 19, 20, 21 திகதிகளில் கண்டி கண் ஆஸ்பத்திரியில் 27 பேருக்கு இலவச கற்றாக் சத்திர சிகிச்சையை நடாத்தியது. அப்புத்தளை பிரதேசத்திலிருந்து 14 பேரும், பன்வல பிரதேசத்திலிருந்து 13 பேரும் பயன் பெற்றனர். இதில் முழுமையாக கண்பார்வையற்றிருந்த அப்புத்தளை பிரதேசத்தை சேர்ந்த 4 பேரும் பன்விலை பிரதேசத்தை சேர்ந்த 1 வரும் பார்வையை மீண்டும் பெற்றனர். இவர்களுக்கான தேவைகளை முழுமையாக சத்திய சாயி சேவா நிறுவனமே பொறுப்பேற்றிருந்தன. இவ்வாறான கண்சிகிச்சை முகாம் கண்டியில் முதல்தடவையாக இடம்பெற்றுள்ளது. வவுனியா நிலையத்தின் அனுபவம் வாய்ந்த தொண்டர்கள் முன்னின்று பணியாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாயில் அமைந்துள்ள சத்திய சாயி பாடசாலையின் பண்பு விருத்தி விளையாட்டு விழா 27.02.2010 மாலை 2.45 மணிக்கு நடைபெற்றது.











பூர்ணச் சந்திர ஹோலின் உயர்த்தப்பட்ட மேடைக்கு 30.04.2010 அன்று முதன் முறையாக பகவான் வருகை தந்த போது கடந்த சாயி மார்க்க இதழை ஆசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org